REGISTERED AS A NEWSPAPER பக்கங்கள் 06

விலை ரூபா 5·00

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி PEOPLES DAILY

நாதம் 5 திருவள்ளுவர் ஆண்டு 2025 ஐப்பசி 19 05-11-94 சனிக்கிழமை ஓசை 260

## சம்பள உயர்வு கோரி தாதியர் 48மணி நேர கால அவகாசம்

(கொழும்பு)

தாதிகள் சங்கம் சம்பள உயர்ச்சி கோரி 48மணித்தியாலங்கள் அரசிற்கு அவகாசம் வழங்கியுள்ளது வரும் 48 மணி நேரத்திற்குள் ஏற்றுக் கொள்ளப்பட்ட 16 ரூபா சம்பள உயர்ச்சியை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தாதிகள் சங்கம் சுகாதார அமைச்சை கோரியுள்ளது, இல்லாவிட்டால் தாம் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடப்போவதாக சுகாதார அமைச்சர் ஏ. எச். எம். பௌசிக்கு அறிவித்துள்ளனர்

# ஜனாதிபதித் தேர்தலில் நான் வென்றால் சமாதான பேச்சுகள் உடன் நிறுத்தப்படும்!

## ஆயுதங்களைக் கீழே வைத்தால் மட்டுமே புலிகளுடன்பேச்சு என்கிறார் சிறிமா திசாநாயக்கா

(கொழும்பு)

நான் ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்டால் விடுதலைப் புலிகள் இயக்கத்துடனான பேச்சுவார்த்தைகள் உடன் நிறுத்தப்படும் எனவும், புலிகள் ஆயுதங்களை கீழே வைத்தபின்னர் தான் சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்படும் எனவும் ஐக்கியதேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளரான சிறிமா திசாநாயக்கா தெரிவித்தார்.



ஜனாதிபதி வேட்பாளராகத் தெரிவு செய்யப்பட்ட பின்னர் அவர் நடத்திய முதலாவது பத்திரிகையாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். இம் மாநாட்டில் கலந்து கொண்ட பி.பி.ஸி. செய்தியாளர் ஜோர்ஜ் ஆர்னியின் கேள்விகளுக்கு அவர் அளித்த பதில்களை இங்கே தருகிறோம்;

கேள்வி; சிறிலங்காவின் ஜனாதிபதி பதவிக்கான தேர்தல் என்பது விடுதலைப் புலிகள் தொடர்பாக மக்கள் கொண்டிருக்கும் கருத்து பற்றிய ஒரு கணிப்பீடாக மாறியிருக்கிறது. நீங்கள் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டால் விடுதலைப் புலிகள் தொடர்பாக எவ்விதம் செயற்படுவீர்கள்?

பதில்: விடுதலைப் புலிகள் தமது வன்முறைப் போராட்டத்தை, தமது ஆயுதங்களை கைவிட்டால் மட்டுமே அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தப்படும். அவ்வாறான பேச்சுக்களும் இலங்கை - இந்திய சமாதான உடன்படிக்கையின் அடிப்படையிலேயே அமையும்.

## புலிகளுடன் பேசாதீர் என எச்சரிப்பேன்

கேள்வி: அவர்கள் தமது போக்கை மாற்றிக்கொள்ளாதவரை நீங்கள் இராணுவத் தீர்வை வலியுறுத்துவீர்களா?

பதில்: விடுதலைப் புலிகள் ஆயுதங்களை கீழ போடாதவரை தீர்வு எதுவும் ஏற்படாது என அவர்களுக்கு எச்சரிப்பேன்-

பதில்: யாழ்ப்பாணத்தின் ஏனைய தலைவர்களுடன் பேச்சுவார்த்தைகள் நடத்தப்படும்- யாழ்ப்பாண மக்கள் கடந்த பத்து ஆண்டு காலமாக பெரும் கஷ்டங்களை அனுபவித்து வருகின்றனர்- இந்தப் பிரச்சினைக்கு விரைவில் தீர்வு காணப்பட வேண்டும் என்பதை அவர்கள் விரும்புவார்கள் என்பது நிச்சயம்.

கேள்வி: நீங்கள் வெற்றிபெற்ற பின்பும் திருமதி சந்திரிகா தலைமையிலான அரசு தொடர்ந்தும் பேச்சு வார்த்தைகள் நடத்த முற்பட்டால் உங்கள் தடுப்பு அதிகாரத்தை பயன்படுத்துவீர்களா?

கேள்வி: தமிழர் பிரச்சினைக்கு தீர்வு காணும் வகையில் பொது மக்கள் கூட்டணி அரசுடன் ஒத்துழைக்க முடியும் எனக் கருதுகிறீர்களா? அல்லது இக் குறிப்பிட்ட விடயத்தில் அரசுடன் மோதல் ஏற்படும் எனக் கருதுகிறீர்களா?

பதில்: இப்பிரச்சினைக்கு ஒரு தீர்வு காணப் படுவதற்கு அவர்களுடன் இணைந்து செயற்பட என்னால் ஆனதைச் செய்வேன்- எனினும் புலிப்படையினரிடம் ஆயுதங்கள் இருக்கும்வரை சமாதானப் பேச்சு நடத்துவதை தொடர்ந்து அனுமதிக்க மாட்டேன்-

## அரசியலுக்கு நான் புதியவளல்ல

கேள்வி: அரசியலுக்கு நீங்கள் புதியவர் என்றும் அரசியலில் அதிகம் அனுபவம் இல்லாதவர் என்றும் பொதுவாக ஒரு கருத்து நிலவுகிறது- அதுபற்றி என்ன கூற விழைகிறீர்கள்-

பதில்: இது சரியான ஒரு கருத்து அல்ல- 1970-ம் ஆண்டு முதல் எனது கணவரான காமினி திசாநாயக்காவுடன் இணைந்து பல்வேறு அரசியற் செயற்பாடுகளிலும் நான் ஈடுபட்டிருக்கிறேன்- இதன் பின்னர் நடைபெற்ற அனைத்து தேர்தல்களிலும் பிரசார வேலைகளில் நானும் ஈடுபட்டிருக்கிறேன்- நுவரெலியா தொகுதி மக்கள் மட்டுமன்றி நாடு முழுதும் உள்ள மக்களும் இதனை அறிவர்-

கேள்வி: நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டதும் பின்னணியிலிருந்து அவருடன் செயற்பட முடியும் என கருதியிருப்பீர்கள்.

பதில்: ஆம்- அவர் அமைச்சராக இருந்த போது சர்வதேச அரங்கிலும் மற்றும் தலைவர்களுடனும் அவர் எப்படி நடந்து கொண்டார் என்பதை நான் நன்கறிவேன்- அத்துடன் அவரது விருப்பத்திற்கேற்றபடி செயற்படமுடியும் என்ற நம்பிக்கையும் எனக்குண்டு-

## நீங்கள் ஐ. தே.கவில் உள்ளீர்களா? கொள்கையை முன்னெடுக்க முடியுமா

கேள்வி: நீங்கள் கட்சியின் அங்கத்தவரில்லை எனவும் ஐ-தே-க-வின்கொள்கை முன்டுப்பது உங்களுக்கு கடினம் எனவும் கூறப்படுவது பற்றி என்ன கூறுவீர்கள்?

பதில்: எனது கணவரின் சிந்தனைகள்பற்றி எனக்கு நன்குதெரியும்- இது குறித்து நாங்கள் பல தடவைகளில் விவாதித்துள்ளோம்; அவரது பேச்சுக்களும் எழுத்துக்களும் எனக்கு நன்கு தெரியும், எனவே அவர் என்ன செய்வதற்கு எத்தனித்தார் என்பதை நான் நன்கு உணர்வேன்- அதனை நிறைவேற்ற முடியும் என்ற நம்பிக்கையும் எனக்குண்டு.

கேள்வி: அவருடைய அரசியல் சிந்தனைகள் பற்றி

பதில்: இத் தருணத்தில் அவர் நாட்டுக்கு என்ன செய்ய விழைந்தார் என்பதை நான் நன்கறிவேன்- அதனை நிறைவேற்றும் வகையில் போதுமான புத்தி சாதுரியம் எனக்கும் இருப்பதாகவே கருதுகிறேன்-

## இளைஞர் விடுதலை

(வடமராட்சி)

ஒரு வாரகாலமாக பலாலி இராணுவ முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த இளைஞர் ஒருவர் விடுவிக்கப்பட்டு நேற்று வந்து சேர்ந்தார்.

புன்னாலைக் கட்டுவனைச் சேர்ந்த குட்டித்தம்பி -இராசகுமார் (31) என்பவரே விடுவிக்கப்பட்டவராவார்.

(6 ஆம் பக்கம் பார்க்க)

## கோமாரியில் மா வந்தது

(வடமராட்சி)

திருகோணமலையில் இருந்து 3ஆயிரத்து 200 மெற்றிக்தொன் மாவை ஏற்றிக்கொண்டு புறப்பட்ட 'கோமாரி' கப்பல் நேற்று பகல் 11 45 மணியளவில் பருத்தித்துறை துறைமுகம் வந்துசேர்ந்தது

நேற்று மழை பெய்த வண்ணம் இருந்ததனால் மா இறக்கும் வேலைகள் நடை

(6ஆம் பக்கம் பார்க்க)

## ஹட்சன் உரை இடை நிறுத்தம்

(கொழும்பு)

சிறிலங்கா ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் ஜனாதிபதி தேர்தலில் சுயேட்சை வேட்பாளராக போட்டியிடும் ஹட்சன் சமரசிங்காவின் உரையொன்றை சட்டரீதியான காரணங்களுக்காக இடைநிறுத்தியுள்ளது

(6ஆம் பக்கம் பார்க்க

## காமினியின் தீபாவளி வாழ்த்து

(கொழும்பு)

முன்னாள் எதிர்க் கட்சித் தலைவர் காமினி திசாநாயக்கா சகல தலைவர்களுக்கும் தீபாவளி வாழ்த்து மடல்

( 6 ஆம் பக்கம் பார்க்க)

## படகுச் சேவை

கிளாலி-பூநகரி படகுச் சேவை இன்று வழமையான நேரத்திற்கு நடைபெறுமென அரசியற் துறையினர் அறிவித்துள்ளனர்.

## ஜனாதிபதியாகும் தகுதி உண்டா?

கேள்வி: நீங்கள் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்படுவதற்கு முதபு அதற்கு தேவையான தகுதி உங்களுக்கு இருப்பதாக கருதுகிறீர்களா?

பதில்: ஆம் ஜே. ஆர்- ஜெயவர்த்தனாவின் கீழ் அமைச்சராகவும், பின் பிரதமராகவும் இருந்து தான் டி- பி- விஜேதுங்க ஜனாதிபதியானார்- ஆனால் எனது நீண்ட அரசியல் அனுபவம் சட்டத்தரணியாகி தொழில் அனுபவமும் இப்பதவி தரும் சுமைகளை நிறைவேற்ற உதவும் என நம்புகிறேன்-

## பிரதமர் போக்கு கபடத்தனமானது

இதேசமயம் பி. பி- ஸியின் சந்தேசிய செய்தியாளர் எல்மோ பெனாண்டோ. தற்பொழுது பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம் மேற்கொண்ட சமாதான முயற்சிகள் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள் எனக் கேட்டதற்கு,

வடக்கு-கிழக்கு பிரச்சினையை தீர்க்கவென புலிகளுடன் பிரதமர் சந்திரிகா குமாரதுங்கா மேற்கொள்ளும் சமாதானப் பேச்சுக்கள் சிங்கள மக்களின் நலனைப் பாதிக்கும் கபடத்தனமான நடவடிக்கை ஆகும்-

புலிகளுடனான சமாதானப் பேச்சுக்கள் அவசரமாக மேற்கொள்ளப்பட்ட செயற்பாடாகவே கருதுகின்றேன் இந்தப் பேச்சுக்களை எதிர்க்கட்சியையோ மக்களையோ கலந்தாலோசிக்காமல், அவர்களது கருத்துக்கள் பெறப்படாத நிலையில் ஆரம்பித்துள்ளனர். அரசாங்கம் தன்தோன்றித்தனமான முடிவுகளுடன் பேச்சுக்களை மேற்கொள்வதாகவும், புலிகளுக்கு பிடித்தமான அதிகாரிகள் மூலம் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் பேச்சுவார்த்தைகள் நடத்தப் படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

## ஐ.தே.க. நடத்திய தாக்குதல்களே தமிழர்களை யுத்தத்திற்கு தள்ளியது

\- பிரதமர் சந்திரிகா

(கொழும்பு)

1977க்கும் 83இன் கறுப்பு யூலைக்கும் இடையில் ஐக்கிய தேசியக் கட்சி நடத்திய தாக்குதல்களே வடக்கு - கிழக்கு தமிழ் இளைஞர்களை யுத்தத்துக்கு தள்ளியது பெரும்பான்மையான சிங்கள பௌத்தர்களின் நலனை பாதுகாக்கும் அதேவேளை தமிழ்-முஸ்லிம் மக்களது உரிமைகளும் காக்கப்பட வேண்டும் அவர்கள் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு அதிகமாக எங்களுடன் இணைந்து வாழ்ந்தனர் என பிரதமர் சந்திரிகா குமாரதுங்கா தெரிவித்துள்ளார்

நேற்று ரூபவாஹினியில் உரையாற்றிய அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார் அவர் மேலும் தெரிவிக்கையில், ஐ தே கவினர், தங்களது பிரசாரங்களில் எனது தனிப்பட்ட வாழ்க்கை பற்றி

(6 ஆம் பக்கம் பார்க்க)

## இந்திய புலனாய்வு துறைக்கு உத்தியோகபூர்வமாக அழைப்பு

(கொழும்பு)

காமினியின் கொலை சம்பவம் குறித்து விசாரணை நடத்த இந்திய புலனாய்வு நிபுணர்களை அழைக்கும் உத்தியோகபூர்வ கடிதம் நேற்று சிறிலங்கா அரசால் இந்திய அரசிடம் சமர்ப்பிக்கப்பட்டது

சிறிலங்கா வெளியுறவு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் இக் கடிதத்தை இந்திய தூதுவரிடம் ஒப்படைத்தார். இந்திய புலனாய்வுத் துறையின் டி. ஆர். கார்த்திகேயனையும் தடயவியல் நிபுணர் பேராசிரியர் சந்திரசேகரனையும் தமது கணவரின் கொலை குறித்து விசாரிக்க இவ்விரு நிபுணர்களையும் வரவழைக்குமாறு அரசைக் கோரியிருந்தது குறிப்பிடத்தக்கது.

## சந்திரிகா தேர்தலில் வெற்றியீட்டின் இராணுவம் அவருக்கு ஒத்துழைக்குமாம்

(கொழும்பு)

ஜனாதிபதி தேர்தலில் திருமதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க வெற்றியீட்டிய பின்னர், விடுதலைப்புலிகளுடன் மேற்கொள்ளப்படும் சமாதான முயற்சிகளுக்கு இராணுவம் தனது பூரண ஆதரவையும் வழங்கும் இவ்வாறு பெயர் குறிப்பிட விரும்பாத இராணுவ அதிகாரி ஒருவர் ராய்ட்டர் செய்தி நிறுவனத்திற்கு தெரிவித்துள்ளார்.

அத்துடன் பேச்சுவார்த்தைக்காலத்தில் இராணுவம் பலப்படுத்திக்கொள்ளப்பார்க்கிறது எனவும், பேச்சுவார்த்தையைக் குலைக்க இராணுவம் முயல்கிறது எனவும் பிரதமர் குறிப்பிட்டது ஐ தே க ஆதரவாளர்களான சில உயரதிகாரிகளை மனதில் கொண்டே எனவும் தெரிவித்தார்

மேலும் திருமதி சந்திரிகா ஜனாதிபதியானதும், இத்தகைய இராணுவ உயரதிகாரிகள் பதவியிலிருந்து விலகிக் கப்படுவார்கள் என எதிர்

( 6 ஆம் பக்கம் பார்க்க )

## 1994 மாவீரர் நாள்; நாளை கலந்துரையாடல்

எதிர்வரும் 94-ம் ஆண்டு மாவீரர் நாள் சம்பந்தமான கலந்துரையாடல் பின்வரும் நேர, இட அட்டவணைக்கேற்ப நடைபெறவுள்ளதாக, இக்கலந்துரையாடலில் அனைத்து வணிகர் மன்ற, வெதுப்பக உரிமையாளர் சங்க, ஆங்கில மருந்து வணிகர் மன்ற, நிர்வாக சபை உறுப்பினர், ப.நோ கூ.சங்கம், தென்னை பனை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்க நெறியாளர் சபை உறுப்பினர்கள், அனைத்துக் கூட்டுறவு ஊழியர் தொழிற் சங்கங்கள், அனைத்துத் தொழிற்சங்க நிர்வாக சபை உறுப்பினர்கள். சிற்றூர்தி சேவைச் சங்கங்களின் நிர்

(6 ஆம் பக்கம் பார்க்க))

## வரி விளம்பரம்

**திருமண அழைப்பிதழ்**

5-11-94 அன்று செல்வன் செல்வேஸ்வரனுக்கும் செல்வி ரஜிசரணிக்கும் காலை 11 மணியளவில் வண்ணை வைத்தீஸ்வரன் கோவிலில் நடைபெறவிருந்த திருமணம் தவிர்க்க முடியாத காரணத்தால் நல்லை ஆதீனத்தில் அதே சுபவேளையில் நடைபெறும். க. வைரவநாதனும் துணைவியாரும் Dr செ செல்வத்சம்பியும் துணைவியாரும் (9966)

**றோணியோ பிரதி செய்தல்**

100 பேப்பர் இரண்டு பக்கம் தெளிவாக பிரதி செய்வதற்கு 30 ரூபா மட்டும் அறவிடப்படுகிறது. ரைப்பிங் 8/- அறிவகம் புத்தகசாலை 374, மணிக்கூட்டுவீதி (வெலிங்டன் சந்திக்கருகாமை) யாழ்ப்பாணம். (9978)

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**

MBBS பரீட்சையில் சித்தியடைந்தவர்களிடமிருந்து அல்லது கார்த்திகை 1994-ல் இறுதி MBBS பரீட்சைக்கு தோற்றியவர்களிடமிருந்து மருத்துவ பீடத்தில் பின்வரும் துறைகளிற்கான தற்காலிக செய்முறைக் காட்டுநர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

உடலமைப்பியல்
உடற்றொழிலியல்
சமூக மருத்துவம்
மருந்தியல்
சட்ட மருத்துவம்
நோயியல் (நுண்ணுயிரியலும் ஒட்டுண்ணியியலும் உட்பட)
மனநோயியல்
அறுவை மருத்துவம்
மருத்துவம்
குழந்தை மருத்துவம்

சம்பள அளவுத்திட்டம்:- ரூபா 4420/- நிலையானது (மாதமொன்றிற்கு) பரீட்சைப் பெறுபேறுகளிற்காக காத்திருப்போர் ரூபா 4100/- நிலையானது [மாதமொன்றிற்கு] சம்பளத்தில் வைக்கப்படுவர்

குறிப்பு:- இத்துடன், அ) 1993 மே 12ஆம் 2 தேசிய 9/93 இலக்க பொது நிருவாக சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு ஏற்ப மாதாந்தப்படியாக ரூபா 600/- செலுத்தப்படும்

ஆ) 1994 டிசெம்பர் 31 ஆம் தேதி வரை நிலுவையிலுள்ள வேலைகளை நிறைவேற்றும்படியாக மேற்குறித்த சம்பளத்தில் 25 சதவீதத்திற்குச் சமமான தொகை செலுத்தப்படும்

விண்ணப்ப முடிவு திகதி 1994-11-25 ஆகும்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள மக்கள் வங்கிக் கிளையில் அல்லது பல்கலைக்கழக நிதிக்கிளையில் ஒவ்வொரு விண்ணப்பப்படிவத்திற்கும் ரூபா 20/- செலுத்திய பின்னர் இப்பல்கலைக்கழகத்தின் தாபனக்கிளைச் சிரேஷ்ட உதவிப் பதிவாளர் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளக்கூடிய படிவங்களில் மாத்திரம் விண்ணப்பங்கள் செய்யப்பட வேண்டும்.

தபால் மூலம் படிவங்களையும் விபரங்களையும் பெற விரும்புவோர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பதிவாளர்/நிதியாளர் பெயரில் பெறப்பட்ட ரூபா 20/- பெறுமதியான காசுக்கட்டளை/தபாற்கட்டளையுடன் சுயமுகவரியிட்டு 1/- ரூபா முத்திரை ஒட்டப்பட்ட 23x10 ச.மீ. அளவுடைய கடித உறையை அனுப்புதல் வேண்டும்.

அரசாங்கத் திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள் நியதிச்சட்ட சபைகளின் விண்ணப்பதாரிகள் அந்நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் அனுப்புதல் வேண்டும்

பதிவாளர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்
1994-10-31
[சி/10647]

# வெளிநாட்டில் கல்வி பயில ஜனாதிபதி நிதியில் மோசடி

## முன்னாள் அதிகாரிகள் ஈடுபட்டுள்ளனராம்

(கொழும்பு)

முன்னைய அரசின் காலத்தில் ஜனாதிபதி நிதியத்தில் துஷ்பிரயோகங்கள் நடந்தமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. முன்னைய அரசின் சில சிரேஷ்ட அதிகாரிகள் 1980-1990 காலப்பகுதியில் தமது பிள்ளைகள் வெளிநாட்டில் கல்வி பயில ஜனாதிபதி நிதியத்திலிருந்து பணம் பெற்றதாக தெரிவிக்கப்படுகிறது. இதை விசாரிக்க அரசு முடிவு செய்துள்ளது.

இவ்வதிகாரிகள் தம் பிள்ளைகளை ஒக்ஸ்போர்ட், கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகங்களுக்கு அனுப்பியிருந்ததாக கூறப்படுகிறது. அரச வங்கி ஒன்றில் உயர் பதவி வகித்த அதிகாரி ஒருவரும் இதில் அடங்குவார் இவர் முன்னணி அரசியல்வாதி ஒருவரின் செயலராகவும் இருந்துள்ளார்.

**வலயம் -1 பாடசாலைகளின்**

# பழுதடைந்த தளபாடங்கள் திருத்துவதற்கு ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

ஒவ்வொரு கோட்டங்களுக்கும் பொதுவான இடம் ஒன்றில் வைத்து வலயம்-1 கல்வித்திணைக்களத்துக்கு உட்பட்ட பாடசாலைகளில் பழுதடைந்த தளபாடங்களை திருத்திக் கொடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேற்படி தளபாடங்கள் திருத்தம் செய்யப்பட வேண்டிய பாடசாலை அதிபர்கள் அந்தந்தப்பகுதி பிரதேச கல்விப் பணிமனையுடன் தொடர்பு கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். [பா]

**பாணிற்கு தட்டுப்பாடு**

யாழ். குடாநாட்டில் பாணிற்கு பலத்த தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது குறைக்கப்பட்ட விலைக்கு கோதுமை மாவை பாவனையாளர்கள் போதியளவு நுகரமுடியாதுள்ளதாலும்

அதிகரித்த பாண்தேவையை ஈடுசெய்யக்கூடியளவு பாண் உற்பத்தி அதிகரிக்கப்படாததினாலும் இந்த தட்டுப்பாடு யாழ். குடாநாட்டில் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (இ)

# அடையாளம் தெரியாது தாக்கியவருக்கு அபராதம்

சகோதரியுடன் சேட்டை செய்வதாக அறிந்த சகோதரனும் அவரது உறவினர் இருவரும் வீதியில் நின்ற மூன்று சகோதரருக்கு கத்தி, செயினால் தாக்கி காயம் விளைவித்ததினால் குற்றப்பணம் அறவிடப்பட்டது

சாவகச்சேரி கெருடாவில் பகுதியைச் சேர்ந்த பெண் ஒருவர் தனது சகோதரனுக்கு தன்னை சந்தியில் வைத்து சில பெடியள் பகிடி விடுவதாக கூறியிருந்தார். சகோதரன் இதைக் கேட்டு திடீரென ஒரு நாள் தனது தங்கைக்குப்பின் சென்ற வேளை ஓர் மரத்தில் இப்பெண்ணின் பெயர் பொறிக்கப்பட்டு இருந்தது இதற்குப் பக்கத்தில் மூன்று சகோதரர்கள் நின்று கதைத்துக் கொண்டு இருந்த வேளை இப்பெண்மணி சைக்கிளை நிறுத்திவிட்டு அம்மூவரிடம் இந்த மரத்தில் தனது பெயர் எழுதியது யார் தெரியுமா எனக்கேட்டாராம் அப்போது மூவரும் தெரியாது என்று கூறியவேளை இப்பெண்ணின் சகோதரனும் உறவினர் ஒருவரும் பின்னால் வந்து இவர்கள் மூவரும் தான் தனது சகோதரியுடன் சேட்டை செய்வது என நினைத்து இருவரும் அந்த மூன்று சகோதரர்களுக்கும் சைக்கிள் செயினாலும் கத்தியாலும் தாக்கினார்களாம் பாதிக்கப்பட்ட மூவரும் சாவகச்சேரி காவல் துறையில் முறைப்பாடு செய்துள்ளனர் காவல் துறையினர் எதிராளியான பெண்ணையும் தாக்கியவர்களையும் மன்றில் முற்படுத்தியபோது.

மன்று வழங்கிய தீர்ப்பு மனுதாரர்களுக்கு திருப்தி அளிக்காத காரணத்தினால் மேல்நீதி மன்றில் முறைப்பாடு செய்தனர்

மேல் நீதிமன்றானது பெண்ணை எச்சரிக்கை செய்து இந்த வீதியில் நின்ற ஆண்கள் மூவருக்கும் தாக்கி காயம் விளைவித்த இருவருக்கும் குற்றப்பணமாக தலா 1000 ரூபா கட்டும் படியும் தவறின் 40 நாட்கள் கட்டாய சமூகசேவை எனவும் தீர்ப்பளிக்கப்பட்டது (86)

**அறிவிப்பு**

1993-ம் ஆண்டு வவுனியாவில் "டெலிக்" "DELIC" பயிற்சி நெறியினை மேற்கொள்வதற்குத் தெரிவு செய்யப்பட்டு. இதுவரை அப்பயிற்சி நெறியிற் சேர்ந்து பயிலாத மாணவர்களுக்கு 1995-ம் ஆண்டு தை மாதம் யாழ்ப்பாணத்தில் இப் பயிற்சிநெறியினை ஆரம்பிப்பதற்குத் தேவையான விபரங்கள் அவர்களிடமிருந்து பெறப்பட வேண்டியுள்ளதால் அம்மாணவர்களை எதிர்வரும் 7ஆம் திகதி திங்கட்கிழமை காலை 11.30 மணியளவில் யாழ்ப்பாணம் கல்வித் திணைக்களத்திற்கு வருகை தருமாறு வலயம் 1 கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

**யாழ் மிட்ரவுண் றோற்றறக்ற் கழகம் நடாத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி**

உதைபந்தாட்ட ரசிகர்களே
எதிர்வரும் 06-11-94 ஞாயிறு மாலை 3.00 மணிக்கு யாழ் மத்தியகல்லூரி மைதானத்தில் நடைபெறும் மோதும் அணிகள்

1 ஞானமுருகன் எதிர் றோயல்
2 பாடுமீன் எதிர் சென் அன்ரனிஸ்

உயர் திருமண பட்டுப் பிடவைகளுக்கு தலைநகரில் சிறந்த ஸ்தாபனம்
**காவேரி பட்டுச்சோலை**
48, சோதியா தெரு
யாழ்ப்பாணம்
(9982)

**தமிழகம் தஞ்சாவூரில் நடைபெறும் எட்டாவது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில்,**

# ஈழத்துத் தமிழ் நூல்கள் கண்காட்சி நடைபெறும்

காந்தளகம் நிறுவனத்தினர் இதை ஏற்பாடு செய்துள்ளனர்

உங்கள் - நூல் வெளியீடுகள் ஒவ்வொன்றிலும் 5 படிகள் பின்வரும் முகவரியில் கொடுத்து உரிய கழிவுக்குப் பின்னுள்ள விலையைப் பெற்றுக் கொள்க.

**திரு. க. ஜீவகதாஸ்**
அறவழிப் போராட்டக் குழு
கைதடி நுணாவில்,
சாவகச்சேரி.

விளம்பரம் வெளியிட்டவர்;
**திரு க. சச்சிதானந்தன்**
காந்தளகம் 834, அண்ணாசாலை,
சென்னை 600 002.
(9983)

**அதிர்ஷ்ட லாபச்சீட்டிழுப்பு பிற்போடப்பட்டுள்ளது**

மீசாலை தெற்கு மதுவன் ச. ச. நிலையம் அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு தவிர்க்க முடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டுள்ளது- மீண்டும் எதிர்வரும் 27-11-94 மாவீரர் தினத்தன்று குலுக்கப்பட்டு 30-11-94 ஈழநாதம் பத்திரிகையில் வெளியிடப்படும்

நிர்வாகம்
மதுவன் ச. ச. நிலையம்,
மீசாலை [9986]

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை**

ஒப்பந்த அடிப்படையில் முழுநேர உபவிடுதித் தலைவர் பதவிக்கான (ஆணும் பெண்ணும்) விண்ணப்பங்கள் பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து 1994-11-30 வரை என்னால் பெற்றுக் கொள்ளப்படும்.

**சம்பள அளவுத்திட்டம்**
ரூபா 5400/- (நிலையானது) மாதமொன்றுக்கு

**தகைமைகள்:**
அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழக மொன்றின் பட்டதாரி,
விடுதிகளை நிருவகிப்பதிலும், முகாமை செய்வதிலும் அனுபவம் உடையவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்

வயது:
40 ஆண்டுகளுக்கு மேற்படலாகாது

குறிப்பு:
தெரிவு தேர்வு மூலமும் நேர்முகப் பரீட்சை மூலமும் நடைபெறும்.

வெற்றி பெறும் விண்ணப்பதாரி நியமனம் பெறும் யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள பாலசிங்கம்விடுதி/ ஆனந்தகுமாரசாமி விடுதி/பெரிய கடை விடுதி/மலாயாசச்சங்கவிடுதி/ இராமநாதன் நுண்கலைக் கல்விக்கழக விடுதி அல்லது கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள விவசாயபீட விடுதி ஆகியவற்றிலொன்றில் வசித்தல் வேண்டும் ஆனால் வதிவுமண்டபத்தில் குடும்பத்துடன் வசிக்கமுடியாது வெற்றிபெறும் அபேட்சகர் மீளளிக்கப்படும் பிணைவைப்பாக 5000/- ரூபாவைச் செலுத்தல் வேண்டும் இத்தொகை அவரின் சம்பளத்திலிருந்துபத்துமாதாந்தத்தவணைப்பணங்களில் அறவிடப்படும்

சம்பளத்திற்கு மேலதிகமாக சம்பளத்தின் 25 சதவீதம் நிலுவையிலுள்ள பணி நிறைவேற்றுப் படியாக 1994 டிசெம்பர் 31 ஆம் திகதி வரை செலுத்தப்படும்.

1993 மே 12-ம் தேதிய 9/93 ஆம் இலக்கப் பொது நிர்வாக சுற்று நிருபத்தின் ஏற்பாடுகளிற்கு ஏற்ப 600/- ரூபா மாதாந்தப் படி செலுத்தப்படும்

ஒவ்வொரு விண்ணப்பப் படிவத்திற்கும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலுள்ள மக்கள் வங்கியின் நவீன சந்தை கிளையிலோ சிறாப்பரின் முகப்பு மேசையிலோ 20 ரூபாவை செலுத்தி இப்பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட உதவிப் பதிவாளர் (தாபனங்கள்) அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளக் கூடிய படிவங்களில் விண்ணப்பித்தல் வேண்டும்- தபால் மூலம் படிவங்களையும் விவரங்களையும் பெற விரும்புவோர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நிதியாளர் பெயரில் பெறப்பட்ட 20/- ரூபா பெறுமதியுடைய காசுக்கட்டளை/ தபாற்கட்டளையுடன் 23 × 10 ச.மீற்றர் அளவுடைய சுயமுகவரியிட்ட 1/- ரூபா முத்திரையொட்டப்பட்ட கடித உறையை அனுப்புதல் வேண்டும் விநியோகிக்கப் பெற்ற படிவங்களில் அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மாத்திரம் ஏற்றுக் கொள்ளப்படும்

அரசாங்கத் திணைக்களங்கள் அரச கூட்டுத்தாபனங்கள் நியதிச்சட்ட சபைகளில் உள்ளோர் தமது விண்ணப்பங்களை நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் அனுப்புதல் வேண்டும்-

விண்ணப்ப முடிவு தேதியின் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்களும் தெளிவில்லாதவாறு விபரங்கள் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்

பதிவாளர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
1994-10-27
(சி10648)

# நன்றி நவிலல்

அமரத்துவமடைந்த எமது குடும்பத்தலைவர் ஞானப்பிரகாசம் ஸ்ரனிஸ்லோஸ் அவர்களது மரணச் சடங்கில் கலந்து எமது பிரிவுத்துயரில் பங்கு கொண்ட குருக்கள், அருட் சகோதரிகள் அருட் சகோதரர்கள், சுண்ணாகம் பாஷையூர் பங்குகளின் அன்பர்கள், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், உறவினர்கள் நண்பர்கள் ஆகியோருக்கும் அனுதாபச் செய்திகளைத் தெரிவித்த அன்பர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்:

"ஜொஸ் லூர்ட்ஸ்"
மிருசுவில்
(9985)

மனைவி, மக்கள்,
மருமக்கள்

# நினைவு கூருகின்றோம்...

## 05. 11. 94

1986-ம் ஆண்டு இதேதினத்தில் திருமலை-மூதூர் பகுதியில் சிறிலங்கா இராணுவம் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய,

**மேஜர் கணேஸ்** (சித்திரவேல் சிற்றம்பலம் - 1ம் படிவம், பேராறு, கந்தளாய் - திருமலை)

1988-ம் ஆண்டு கிழவிக்குளம் பகுதியில் இந்தியப் படையினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய,

**ரமணன்** (கதிர்காமு நந்தீஸ்வரன் - இரணை இலுப்பைக்குளம் - வவுனியா)

சாவகச்சேரிப் பகுதியில் தேசவிரோதிகளால் சுட்டுக் கொல்லப்பட்ட நாட்டுப்பற்றாளர்

**சரவணமுத்து செல்வராசா** (மாமா) நுணாவில்-சாவகச்சேரி)

1989-ம் ஆண்டு திருக்கோயில் பகுதியில் ஈ-பி-ஆர்-எல் எவ்மற்றும் தமிழ்த்தேசியஇராணுவத்தினரின் முகாம் தாக்குதலின் போது வீரச்சாவெய்திய,

**யோகன்** (வடிவேல் வேல்ராஜன் - கள்ளியந்தீவு, திருக்கோயில் - அம்பாறை)

**கப்டன் ஜோன்சன்** (சுந்தரலிங்கம் நிசாந்தன் முறக்கொட்டாஞ்சேனை-மட்டு).

**கப்டன் காதர்** (வைத்தியபிள்ளை கிர்த்திசீலன்-கோயில் போரதீவு - மட்டு)

**சங்கர்-வக்கர்** (அந்தோனிப்பிள்ளை ஜெயலிங்கம் -மட்டகழி - மட்டு)

**நேசன்** (தில்லையம்பலம் ராஜா - புல்லுமலை -மட்டு)

தம்பிலுவில் பகுதியில் ரெலோ மற்றும் தமிழ்த் தேசிய இராணுவத்தினரின் முகாம் மீதான தாக்குதலின் போது வீரச்சாவெய்திய,

**முகிலன்** (இராசமாணிக்கம் ஜீவராசா - கோட்டைகல்லாறு-மட்டு)

அக்கரைப்பற்றுப் பகுதியில் தேசவிரோதிகளால் கொல்லப்பட்டு எமைப் பிரிந்த

**ஹசன் ஆதம்பாவா** ஹசன்-மாவடிச்சந்தி மூதூர்-திருமலை]

1990-ம் ஆண்டு கீரிமலைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரின் தாக்குதலில் வீரச்சாவெய்திய

**செல்வம்** (கெங்கா ஜெயகாந்தன் பொத்துவில்-03 அம்பாறை)

**மகேஸ்** (........)

1992-ம் ஆண்டு வளலாய், பத்தமேனி ஒட்டகப்புலம் ஆகிய பகுதிகளிலிருந்து முன்னேற முயன்ற சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய

**லெப். உமைமாறன்** (முருகேசபிள்ளைஜீவகுமார்-புதுக்குடியிருப்பு- முல்லைத்தீவு

**2.ம் லெப் குகன்-நீல்மன்** சிதம்பரப்பிள்ளை இந்திரகுமார் -துன்னாலை வடக்கு)

பருத்தித்துறை கடற்பரப்பில் பயிற்சியின்போது கடலில் மூழ்கியதில் எமைப் பிரிந்த

**லெப். பார்த்தீபன் விநாயகம்** ஐயாத்துரை பிரபாகரன் புலோலிகிழக்கு பருத்தித்துறை

இதேதினம் தமிழீழ எல்லைக்குட்பட்ட பிரதேசங்களிலும் கடற்பரப்பிலும் சிறிலங்காப்படையினரால் கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமக்கள்

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

**தமிழீழ விடுதலைப்புலிகள்**

(சி-10641)

# 1.ம் ஆண்டு நினைவஞ்சலி



தாயின் மடியில்-
6-11-1977

தாயகமடியில்
15-11-1993

## வீரவேங்கை மாணவன்
(முத்தையா சிவகுமார்)

கண்ணன் வந்து வெண்ணையுண்ட கண்ணாபுரத்தினிலே கார்த்திகைத் திங்களன்று முத்தையா -சிவபாக்கியம் அவர்களின் செல்வக் குமாரனாய் வந்துதித்தாய். அக்காமார் ஐவரும், அண்ணாவும் அன்பையே அமுதாக அள்ளிப் பொழிகையிலே, அருமை அப்பாவையும் காலன் கவர்ந்து சென்றான் அன்புமிகு அம்மாவுடன் வாழ்ந்து வருகையிலே படிப்பைப் பாதியிலே நிறுத்திவிட்டு பகைவருடன் போராடினாய். மாணவன் என்றுன்னை தோழர்கள் அழைத்திட, பெற்றவள் கதறியழ, உடன்பிறந்தோர் உருகியழ சுற்றத்தார் சூழ்ந்திருக்க நீயோ மலர்களிலே ஓர் மாவீரனாய் துயில் கொண்டாய், ஓராண்டு சென்றாலும் உன் நினைவு அகலாது

5-11-94 இன்று இவரது இல்லத்தில் நடைபெறும் மதிய போசனத்தில் கலந்து கொள்ளுமாறு சகபோராளிகள், உற்றார் உறவினர்களை அழைக்கின்றோம்.

-குடும்பத்தினர்

62: கண்ணாபுரம்
கொட்டடி
(9981)

## ஆசிரியர் புதியசம்பளதிட்டம்

(கொழும்பு)
புதிய ஆசிரிய சேவைத் திட்டத்தின் கீழ் ஆசிரியர் ஒருவரின் குறைந்தபட்ச மாத வேதனம் ரூபா 3500 ஆக இருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

புதிய வகுப்புக்களும் தரங்களும் சம்பளத்திட்டமும் வருமாறு:

| | | |
|---|---|---|
| பிரிவு 1 | | 105,000 - 10×4800 - 153,000 |
| பிரிவு 2 | தரம் 1 | 80,400 - 7X3000 - 101,400 |
| பிரிவு 2 | தரம் 11 | 53,880 - 15X1500 - 77280 |
| பிரிவு 3 | தரம் 1 | 42,720 - 12X1200 - 57,120 |
| பிரிவு 3 | தரம் 11 | 32,520 - 10X780 - 2X1200 - 42,720 |

# இலங்கையில் இனப்பிரச்சினை இல்லை
# தமிழர்களுக்கு அனைத்து வசதியும் உண்டு
## ஐலண்ட் பத்திரிகையில் ஒரு பேரினவாதி

(கொழும்பு)
இலங்கையில் இனப் பிரச்சினை உள்ளது என்று கூறுவது தவறானதாகும் என ஐலண்ட் பத்திகையில் சிறிவிஜயா என்பவர் எழுதிய கட்டுரை ஒன்றில் குறிப்பிட்டுள்ளார்.

இனப்பிரச்சினை உண்டா என்ற தலைப்பிலான அக்கட்டுரையில் அவர் தெரிவிப்பதாவது உலகத்தில் இலங்கையில் மட்டுமே அதன் முத்திரை, பணநோட்டு, உத்தியோக பூர்வ ஆவணம் என்பவற்றில் தமிழ் பொறிக்கப்படுகின்றது இந்தியாவில் கூட 6 கோடி தமிழர்கள் இருந்தும் இந்நிலை அங்கில்லை.

நிர்வாக சேவை தெரிவுகளுக்கு சொந்த மொழியில் பரீட்சை எழுத அனுமதி வழங்கப்பட்டுள்ளது. நாட்டின் 12 சதவீத மக்களுக்கு இது குறைவான உரிமையா? உலகில் உள்ள எந்த ஓர் நாட்டிலும் தமிழர்களுக்கு இத்தகைய உரிமைகள் வழங்கப்பட்டுள்ளதா?

சிலர் வடபகுதி புறக்கணிக்கப்பட்டதாகக் கூறுகின்றனர். இது தவறு ஈழப்போராட்டம் ஆரம்பிக்க முன் அங்கு அபிவிருத்திக்கென பெருமளவு நிதி ஒதுக்கப்பட்டது அச்சமயத்தில் யாழ் மாவட்டத்திறகு ஒதுக்கப்பட்ட நிதியில் காற்பங்கைக் கூட தெற்கில் உள்ள ஒரு மாவட்டம் பெறவில்லை எனவே வட பகுதி புறக்கணிக்கப்பட்டதா?

கல்வியைப் பொறுத்தவரையில் நாட்டின் ஏனைய பகுதிகளை விட அங்கு போதுமான வசதிகள் உண்டு நாட்டின் 12 சதவீதமான தமிழர்களில் 35 சதவீதமான தொழில்சார் விற்பன்னர்கள் தமிழர்களாகவே உள்ளன என்றும் அவர் தனது நீண்ட கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார்.

### முதலிடம்

அண்மையில் நடைபெற்ற வேலணைக் கோட்ட பாடசாலைகளுக்கிடையிலான ஆங்கில தினப்போட்டியில் ஆங்கிலப்பாட்டில் யா-புங்குடுதீவுகமலாம்பிகை வித்தியாலய மாணவி இ யசோதினி ஆண்டு 6 இலும் செல்வன் வி.விஜயபாஸ்கரன் ஆண்டு 8 இலும் முதலாம் இடங்களைப் பெற்று மாவட்டப் போட்டிக்குத் தெரிவாகியுள்ளனர்.

### ஹரணவில் ஜெனரேட்டர்

(வடமராட்சி)
யாழ். போதனா வைத்தியசாலைக்கு ஒரு புதிய ஜெனரேட்டர் அடுத்துவரும் 'ஹரண' கப்பலில் வந்து சேரவுள்ளது

மேலும் பிராந்திய சுகாதாரசேவை திணைக்களத்திற்கும் பத்துக்கு மேற்பட்ட சிறிய ஜெனரேட்டர்களும் வருகின்றன. இவை வைத்தியசாலைகளுக்கு வழங்கப்படும் அடுத்து வரும் 'பிளம்பயன்' கப்பலில் மருந்து வகைகளும் வரவுள்ளன. (யோ)

### புலிப்படம் தடை

(சிங்கப்பூர்)
சிங்கப்பூரில் விளம்பரங்களுக்காக புலியை காட்சிப் பொருளாக பயன்படுத்துவது தடை செய்யப்பட்டுள்ளது. பாரம்பரிய சீன மருந்து பொருட்களில் அதன் விற்பனை அதிகரிப்பிற்காக புலிப் படம் பிரசுரிக்கப்படுவது ஒரு குற்றம் என சிங்கப்பூர் அரசு எச்சரித்துள்ளது.

இத்தகைய புலிச் சின்னம் பொறிக்கப்பட்ட சீன பாரம்பரிய மருந்து பொருட்கள் சிங்கப்பூரில் விற்பனை செய்வது நேற்று முதல் தடை செய்யப்பட்டுள்ளது புலிகளின் எண்ணிக்கை குறைவதால் அவ்விலங்கை பாதுகாக்கும் திட்டமாகவே சிங்கப்பூர் இந்நடவடிக்கையை எடுத்தது



டென்மார்க்கிற்கு அப்பால் உள்ள கடலில் உயிர்காப்பு படகுகளில் தத்தளித்துக் கொண்டிருந்த இலங்கைத் தமிழ் அகதிகளில் ஒருவர் டென்மார்க் பொலிசாரால் விசாரணைக்காக அழைத்துச் செல்லப்படுவதை மேலுள்ள படத்தில் காணலாம்.

## தெற்கிலும் பாதுகாப்பு இல்லை
## குண்டுவெடிப்பு இதையே காட்டுகிறது

(கொழும்பு)
விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்தம் என்பது இப்போது மட்டுப்படுத்தப்பட்டதாக இல்லை குறிப்பாக தெற்கிலும் பாதுகாப்பு இல்லை என்ற நிலை காமினி திசாநாயக்கா உட்பட பலர் கொல்லப்பட்ட பாலத்துறை குண்டு வெடிப்பு சம்பவம் மூலம் உணர்த்தப்பட்டுள்ளது ஜனாதிபதி பாதுகாப்பு பிரிவின் சேவையும், 200க்கு மேற்பட்ட பொலிசாரின் காவலும் மனித குண்டு ஒன்றை வெடிக்க வைப்பதில் தடையேதும் விதித்து விடுவதாக இருக்கவில்லை தற்கொலைக் குண்டை வெடிக்கச் செய்யக் கூடியவர்கள் தாம் விரும்பியவரை விரும்பிய இடத்தில் கொன்றுவிட முடியும் என்பது உணர்த்தப்பட்டுள்ளது இவ்வாறு ஐலண்ட் நாளிதழின் வாசகர் கடிதம் பகுதியில் ஜெகான் பெரேரா என்பவர் எழுதியுள்ள குறிப்பு ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவர் அதில் மேலும் குறிப்பிடுகையில், இத்தகைய ஆபத்துக்கள் எதிர் நோக்கப்படுகின்ற போதும், பொதுசன ஐக்கிய முன்னணிக்கும் ஐ.தே கவுக்கும் இடையில் நடக்கும் பலப்பரீட்சையானது நாட்டை மேலும் பலவீனப்படுத்துவதாகவே கருதப்படலாம்:

அத்துடன் பொதுசன ஐக்கிய முன்னணியும் ஐ தே கவும் ஒருவர் பலவீனங்களில் மற்றவர் குளிர் காய்வதில் அல்லது ஒருவருக்கு ஒருவர் குழிபறிப்பு கழுத்தறுப்பு என்பவற்றில் ஈடுபடுவதன் மூலம் குழப்பத்தை தூண்டும் சக்திகளுக்கு சாதகமான நிலையை ஏற்படுத்திவிடக் கூடாது எனவும் கேட்டுக் கொண்டிருக்கிறார்.

## வாழைச்சேனை அருகில் படையினர் திடீர் சோதனை

(கொழும்பு)
வாழைச்சேனைக்கு அயலிலுள்ள கிண்ணையடி என்னும் கிராமத்தில் கடந்த வாரம் படையினர் கடும் தேடுதல் நடவடிக்கையொன்றினை மேற்கொண்டுள்ளதாக கொழும்பு தினசரி ஒன்று தெரிவித்துள்ளது.

இதேவேளை வாழைச்சேனை நகரிலுள்ள பல பிரதான வீதிகளில் படையினர் தடைகளை ஏற்படுத்தியுள்ளதாகவும், வாழைச்சேனை பொது மயானத்திற்கு அருகாமையிலுள்ள வீதி போக்குவரத்துக்கு தடை செய்யப்பட்டுள்ளதாகவும் அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

### புனித சாளஸ் முதலிடம்

(யாழ்ப்பாணம்)
மாநகர சேவைக்கால நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் பாடசலைகளுக்கிடையே நடாத்தப்பட்டபேச்சுகட்டுரை போட்டிகளில் யாழ்-புனித சாள்ஸ் மகா வித்தியாலய மாணவன் முதலிடத்தைப் பெற்றுக் கொண்டார்

கடந்த சனிக்கிழமை பேச்சு கட்டுரை மற்றும் சுவரொட்டி போட்டிகள் யாழ்-இந்து மகளிர் கல்லூரியில நடாத்தப்பட்டன.

இதில் பேச்சு மற்றும் கட்டுரை போட்டிகளில் சிரேஷ்ட பிரிவில் சாள்ஸ் மகாவித்தியாலய மாணவன் செல்வன் யேசுதாஸ் அரியதாஸ் முதலிடத்தைப் பெற்று 1500 ரூபாவினை பரிசாகத் தட்டிக் கொண்டார்

### சமுகமளிக்க கோரிக்கை

தேசிய கல்வி நிறுவக - இந்துக் கல்லூரி நிலையத்தைச் சேர்ந்த பட்டப்பின்படிப்பு கல்வி டிப்ளோமா நெறியின் இறுதித் தேர்வு எழுதிய மாணவர்களை இன்று காலை 9.30 மணிக்குநிலையத்திற்குசமுகமளிக்குமாறு சிரேஷ்ட விரிவுரையாளர்திருமதித. வில்வநாதன் கேட்டுக் கொள்கின்றார்.

### வங்கக்கடலில் காற்றழுத்த மண்டலம்

வங்கக்கடலின் தென்மேற்கு தென்கிழக்கு திசையில குறைவான காற்றழுத்தம் உருவாகியுள்ளது. இது காற்றழுத்த தாழ்வுமண்டலமாக தீவிரமடைந்து அதனால் இரு நாட்களுக்கு தமிழ்நாடு வடஇலங்கை பகுதிகளில் பலத்த மழை பெய்யும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாணத்திலு தென் இலங்கையிலும் சில பகுதிகளில் கடும் மழை பெய்யு என தெரிவிக்கப்படுகிறது.

### சேர்பியப் படைகள் கப்ரேக் நகரில் பின்வாங்கல்

(சரஜேவோ)
சேர்பியரின் கட்டுப்பாட்டில் உள்ள பொஸ்னியாவின் கப்ரேக் பகுதியில் கடும் மோதல் இடம் பெற்றுள்ளது. இந் நகரினுள் தாம் பிரவேசித்து விட்டதாக குரோவேஷியப்படைகள் கூறுகின்றன. முஸ்லிம் படைகளும் குரோவேஷியப்படைகளும் நடத்திய தாக்குதலின் பின் குரோவேஷியர்கள் இந் நகரினுள் நுழைந்தனர்.

சேர்பியப் படைகள் இந் நகரை பாதுகாக்க தொடர்ந்து போராடி வருகின்றனர்.

### நோர்வே விமானம கடத்திய நபர் அதிகாரிகளால் கைது

(ஒஸ்லோ)
நோர்வே விமானம் ஒன்றை பலவந்தமாக கடத்திய பொஸ்னியப் பிரஜை ஒருவர் 8 மணித்தியாலங்களின் பின் அதிகாரிகளினால் கைதானார்.

தமது நாட்டிற்கு மனிதாபிமான உதவி வழங்க வேண்டும் எனக் கோரி அவர இவ் விமானக் கடத்தலில் ஈடுபட்டிருந்தார்.

---

**20-ம் ஆண்டு நினைவஞ்சலி**



தோற்றம்: 1938 07 18

மறைவு: 1974 03 12


திருமதி
**அக்னெஸ் இம்மனுவேல் (கண்மணி)**

கண்ணின் மணியே உன் விழிகள் மூடி
ஆண்டுகள் இருபது சென்றதே
நேசமுடன் மனைவியாய்,
பாசமுடன் தாயாய்,
அன்புடன் சகோதரியாய்,
நீ எங்களுடன் வாழ்ந்த காலங்கள்
உன் உயிரின் ஒளியாய் — என்றும்
எங்களுடன் பிரகாசித்துக் கொண்டிருக்கும்,

48, கோவில் வீதி, யாழ்ப்பாணம். — என்றும் உன் நினைவில் கணவன், சகோதரி, பிள்ளைகள்
(9977)

---

**6 ஆம் ஆண்டின் நெஞ்சகலா நினைவுகள்**



அமரர்
**சரவணமுத்து செல்வராஜா (மாமா)**

தென்மராட்சி பிரபல வர்த்தகரும்
சாவகச்சேரி வர்த்தகசங்க முன்னாள் செயலாளரும்

கோளரியாய் பிறப்பு 25.11.51 — கோடரிக்காம்புகளால் அழிப்பு 05.11.88

திதி : 31-10-94

மண்மீட்பை நேசித்து
அண்ணன் படையணியைக்
கண்போல் நேசித்துக் கடமை செய்தாய்!
கண்மூடிச் செயல் செய்து
காடையர்கள் உனைச் சரித்தார்
கண்கலங்கி நீர்சொரிந்து வாடுகிறோம்!
எண்ணத்தில் நீங்காத எங்கள் குலச்சுடரே
என்றும் உன்நாமம் அழியாது
ஆறாத துயரோடு ஆறாமாண்டஞ்சலிகள்
அளித்துன்னை அர்ச்சிக்கிறோம் அமைதிகொள்க!

நுணாவில் மத்தி, செல்வராஜா வீதி, சாவகச்சேரி. — குடும்பத்தினர்
(9969)

---

**நினைவில் நீங்காத 8-ம் ஆண்டு அஞ்சலி**



மூத்த தளபதி
**மேஜர் கணேஷ்**
(சித்திரவேல் சிற்றம்பலம் - கந்தளாய்)
பிறப்பு 09-04-1961 வீரச்சாவு 05-11-1986

கந்தளாய் மண் தந்த காவிய நாயகா
கணேசெனும் சிற்றம் பலமே!
செந்தமிழ் ஈழத்தின் திசையெல்லாம் மணம் தரும்
செம்மலர் நீ எம் பலமே!
இந்த மண் மீதிலே இறப்பிலா நிலையுற்ற
இனிய மாவீர நிலவே!
உந்தனை எங்களின் உளத்திலே சூடியே
உயிர்ப்புடன் அஞ்சலிக்கிறோம்.

இல. 1005, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். (9971) — பிரிவால் வாடும், அன்புத் தம்பி பெற்றோர், உறவினர்கள்

---

*'A keepsake for our Appah'*



**MR. M. SELVARATNAM**
(Ret. Police officer)
Died: 5th Nov. 1989

God gave us a gift
Rare and wonderful
It keeps watch from above
With Loving guide
Though gone aside
In our hearts with pride
We cherish and abide.

Gratefully Remembered,
by your Wife, Children and
Loved ones

Mrs. G. Selvaratnam
Sangarapillai Road,
Manipay. (9727)

# உருளைக்கிழங்கு செய்கையில் உச்ச விளைவுகாண— ஆழமற்ற சால் நடுகை முறையே சிறந்தது

யாழ். குடா நாட்டின் பெருமழைக்குப்பின்னர் நவம்பர் நடுப்பகுதியில் இருந்து டிசம்பர் நடுப்பகுதிவரை உகந்த காலமாகும். இது பன்னெடுங்காலம் தொடர்ச்சியாக மேற்கொண்ட ஆராய்ச்சியின் மூலமாகவும் அதன் மூலம் மேற்கொண்ட பரிசோதனைச் செய்கை மூலம் கண்டறிந்த உண்மையாகும்.

## சுவாத்திய சூழ்நிலை

உருளைக் கிழங்குப் பயிர் ஈரவலயத்திற்குரிய பயிராயிருந்த போதிலும் இங்கு கிடைக்கும் மழைவீழ்ச்சி, பனி, இதன் மூலம் கிடைக்கும் சுவாத்திய சூழ்நிலையை உபயோகப்படுத்திச்செய்கைசித்திகரமாகச் செய்கை பண்ணப்படுகின்றது கிழங்கு விழுவதற்குநிலத்தின் வெப்பநிலையை ப்பனிகட்டுப்படுத்துவதால் உருளைக் கிழங்குச் செய்கையில் பனி முக்கியத்துவம் பெறுகின்றது. கிழங்கு உற்பத்திக்கு ஆகக் குறைந்த வெப்பநிலை 20. செ. கி. ஆகவும் ஆகக் கூடியது 30. செ கி; ஆகவும் இருக்கலாம். ஆனால் 25. செ. கி. மேல் விளைவு குறைந்து கொண்டே போகும். ஆகவே இந்த இரண்டுக்கும் இடைப்பட்ட வெப்பநிலையே உருளைக் கிழங்குச் செய்கைக்குச் சிறந்ததாகும். குறைந்த வயதுடைய இனமாகவும், கூடிய சூரிய வெளிச்சம் கிடைக்கும் காலமாகவும், மண் வெப்பநிலை குறைந்த காலமும், உருளைக் கிழங்குச் செய்கைக்கு ஏற்ற காலமாகும்

## மண்வளம்

யாழ். குடா நாட்டில் உள்ள கல்சியம் செறிந்த செம்மண் பிரதேசம் உகந்த மண்ணாகும். சிறந்த வடிகால் அமைப்புடைய எவ்வகை மண்ணிலும்சித்திகரமாகச்செய்ய முடியும். இத்தகைய மண்ணில் எவ்வளவு மழை வீழ்ச்சியாயினும் அது கிழங்கு உற்பத்தியைப் பாதிக்காது. செய்கைக்கு உட்படுத்தப்படும் நிலம் முன்னதாகவே சொலனேசிக் குடும்பப் பயிர்களான மிளகாய், தக்காளி, கத்தரி, புகையிலை போன்ற பயிர்கள் செய்யப்படாத நிலமாக இருப்பது மிகவும் சிறந்தது.

சிறுபோகத்தில் சித்திரை, வைகாசி மாதங்களில் தினை, சாமை போன்றதானியப்பயிர் செய்யப்பட்ட நிலம் சிறந்த மாற்றுப் பயிர்ச்செய்கை முறைக்குரிய நிலமாகும். இந்நிலத்தில் பங்கசு போன்ற நோய்க் காரணிகள் கட்டுப்படுத்தப்படுவதாகவும் அறிய முடிகிறது.

## நிலம் பண்படுத்தல்:-

உருளைக்கிழங்குச் செய்கைக்கு உட்படுத்தப்படும்நிலம் 3-4 மாதங்களுக்கு முன்னதாகவே அதாவது ஆடி, ஆவணி மாதங்களில் ஆழ உழுது அல்லது கொத்தி வெப்பச் சிகிச்சைக்கு உட்படுத்துவது மிகவும் நல்லது. இதனால் நோய்பீடைத்தாக்கங்களையும் குறைக்கக் கூடியதாகவும் அது அமைகின்றது

## சேதனப்பசளைப் பிரயோகம்

உருளைக்கிழங்குச் செய்கையில் சேதனப்பசளைப் பிரயோகம் மிகவும் இன்றியமையாதது. ஏக்கர்ஒன்றிற்கு 8-10 தொன் நன்கு உக்கிய மாட்டெரு அல்லது கூட்டெரு நடுகைக்கு முன்பே மண்ணுடன் சேர்க்கப்படல் வேண்டும்.

## பசுந்தாட் பசளைப் பிரயோகம்:-

ஆவணி 15க்கும் புரட்டாதி 15க்கும் இடைப்பட்ட காலத்தில் அவரை இனப்பயிர்களில் ஒன்றான சணலை நெருக்கமாக விதைத்து (ஏக்கருக்கு 40-50 கி. கி) 10% பூக்கள் காணப்படும்போது அதாவது 45 - 60 நாளுக்கிடைப்பட்ட பருவத்தில் நிலத்தில் சேர்ப்பது மிகவும் சாலச் சிறந்தது. சணல் நிலத்தில் புதைக்கப்பட்ட நாளில் இருந்து நடுகைக்காலம்வரை களைகள் அதிகம் விருத்தியாகாமல் இருப்பதையும் கவனத்தில் கொள்ளவேண்டும்.

## ஏற்ற இனத்தேர்வு:

வயது குறைந்த இனங்களான டிசாறி, ஆர்க்கா போன்றனவே எச்சூழலிலும் வளரக் கூடியவை. ஆகவேதான் யாழ்ப்பாணக் கமக்காரர்கள் இவ்வினங்களில் அதிகம் நாட்டம் செலுத்துகின்றனர்.

## நடுகைக்கு ஏற்ற தன்மையில் முளைகட்டல்

அறுவடை செய்த கிழங்குகள் உறங்கு காலம் முடிந்ததும் முளைக்க ஆரம்பிக்கும். இவ்வுறங்கு காலம் இனத்துக்கு இனம் மாறுபடும். ஆயினும் பொதுவாக $2\frac{1}{2}$ - 3 மாத காலமாகும். விதைக் கிழங்குகள் விவசாயியிடம் வந்து சேர்ந்ததும் உடனடியாக பெட்டிகளில் இருந்து வேறுபடுத்தி பழுதடைந்த அல்லது சேதமடைந்த கிழங்குகள் வேறுபடுத்தப்படல் வேண்டும். நடுகைக்கு முன்னர் முகிழ்கள் நன்கு முளை கட்டப்பட்டிருத்தல் வேண்டும். இதற்கு ஓரிரு கிழமை காற்றோட்டமுடைய, வெளிச்சம் குறைந்த இடத்தில் மணல் மேல் பரவி விடுவதன் மூலம் முளைகட்டல் துரிதமடைகின்றது. முளைகளின் எண்ணிக்கையானது கிழங்குகளின் வயது, பருமன் என்பனவற்றைப் பொறுத்து பொதுவாக சிறிய கிழங்குகளாயின 3 - 4 முளைகளையும், பெரிய கிழங்குகளாயின் 7-8 முளைகளையும் வளரவிடலாம். முளைகள் கட்டையாகவும், திடகாத்திரமாகவும், பச்சையாகவும் இருத்தல் வேண்டும். பாதகமான சூழ்நிலை காரணமாகக் கிழங்குகள் நேரகாலத்துடன் நட முடியாத சூழ்நிலையில் முளைகள் வளர்ந்து அதிக நீட்சியுற்றும் காணப்படும். அவ்வாறான சூழ்நிலையில் அந்த கையமுளைகளை அகற்றுவதன் மூலம் மீண்டும் புதிய முளைகளுடன் அவை நடுகைக்குத் தயாராகும்.

## நடுகைக்குகந்த விதை கிழங்குத் தேர்வு

பொதுவாக நடுகைக்குரிய விதைக் கிழங்குகள் 28-55 மீ. மீ. அளவுடையனவாக இருத்தல் வேண்டும்;

## நடுகை முறை

யாழ் குடாநாட்டு விவசாயிகள் இருமுறைகளில் நடுகையை மேற்கொள்ளுகின்றனர். சால்களில் நாட்டல், புருவங்களில் நாட்டல், அனுபவ ரீதியாகச் சால் நடுகை முறையேஉகந்ததாகவும் கணிக்கப்படுகின்றது. மழைக்கால மாதலின் ஆழமற்ற சால்களே பெரிதும் விரும்பத்தக்கது-

## நடுகை இடைவெளி

நடுகை இடைவெளியானது கிழங்குகளின் பருமனுக்குத் தக்கபடி நிர்ணயம் செய்யப்படுகின்றது

### கிழங்குகளின் அளவு

28 - 35 மி. மீ
35 - 45 மி. மீ
45 - 55 மி. மீ

### இடைத்தூரம்

60 X 25 செ மீ
60 X 30 செ மீ
60 X 45 செ மீ

## செயற்கைப் பசளைப் பிரயோகம்

நடுகையின்போது அடிக்கட்டுப் பசளையாக உருளைக் கிழங்குக்கு எனத் தயாரிக்கப்பட்ட உரக் கலவையில் ஏக்கர் ஒன்றுக்கு 230 கி கி இடப்படல் வேண்டும்- இக்கலவை கிடைக்காத சந்தர்ப்பத்தில் பின்வருமாறு இக்கலவையை தயார் செய்து கொள்ளலாம்

அமோனியம் சல்பேட் - 100 கி கி. அடர் அதிக எரிகை (T S P) - 100 கி கி, மி பொட்டாஸ் - 30 கி கி

இரண்டடி இடைவெளியில் அமைக்கப்பட்ட சால்களில் அளவாகச் செயற்கைப் பசளை தூவப்படும். பசளை இடப்பட்டதும் அது மண்ணுடன் நன்கு கலக்கப்பட வேண்டும்- அல்லது சாலின் ஓரங்களில் இருந்து பெறப்பட்ட மண் ஓர் படையாகப் பசளையின் மேல் போடப்படும்- இதுவே சிறந்த முறையாகும் எவ்வாறு நோக்கினும் சாலில் இடப்பட்ட பசளைக்கும், கிழங்கிற்கும் நேரடித் தொடர்பு இருக்காது கவனிக்கப்படல் வேண்டும்- மண்ணில் இருக்கும் குறவணவன் புழு, கடி எறும்பு போன்றவற்றின் தாக்கத்தைக் கட்டுப்படுத்த ஏக்கர் ஒன்றுக்கு 9 - 15 கி. கி காபோபியூறடான் குறுணல் நடுகைக்குத் தயாரிக்கப்பட்ட சால்களில் பசளையிடும்போது பிரயோகிக்கவும் அல்லது குளோறோபைறிபொஸ் பூச்சி நாசினியை 1 அவு 3 கலன் நீரில் கலந்து சால்களில் பிரயோகிக்கவும்

## விதைப்பரிமாணம்

ஏக்கர் ஒன்றுக்கு (4000 கன்றுத் தரைக்கு)16-20 அந்தர் (800 - 1000 கி கி] விதைக் கிழங்குதேவைப்படும்

## நடுகை

தயார் செய்யப்பட்ட சால்களில் பசளையிடப்பட்டு மண்படையால் பசளை மூடியதன் பிற்பாடு சால்களில் கிழங்கின் பருமனுக்குத் தக்க இடைவெளியில் கிழங்குகள் வைக்கப்பட்டு சாலின் ஓரங்களில் இருந்து மேலும் மண் பெறப்பட்டு கிழங்கின் மேல் மண்ணிடப் படுகிறது. இப்போது கிழங்கின் நடுகை ஆழம் 7 - 10 செ. மீ. ஆகவும் இருக்கும். நடுகையின் பிற்பாடு அமைக்கப் பட்ட சால் நிலமட்டமாகவும் கிழங்கின் ஓரங்கள் சாலாகவும் அமைந்திருக்கும் இதனூடே நீர்ப்பாசனம் செய்யப்படும். நடுகைமுடிந்ததும் காலநிலையைப் பொறுத்துத் தேவைப்படின் கிழங்கின் ஓரங்களில் உள்ள மிதந்த சால்களில் இலகுவானநீர்ப்பாசனம்மேற்கொள்ளப்படும். நட்டு 7 - 10 நாட்களில் நிலமட்ட வளர்ச்சி பெற்றதும் எவ்வளவு மழையும் பெய்யலாம். ஆனால் நீர்த்தேக்கம் ஆகாது இங்கு நீர் வடிப்பே முக்கியமாகும். 2-3 வது கிழமைகளில் காணப்படும் களைகள் அகற்றப்பட்டு கன்றுகளுக்கு ஆதாரமாக இலகுவாக மண்ணணைக்கப்படும்.

## கிழங்கின் வளர்ச்சிக் கட்டங்கள்

கிழங்கின் வளர்ச்சிக் கட்டங்களை மூன்று பிரிவுகளாகப் பிரிக்கலாம்நடுகை முடிந்ததும் 30- 35 நாள் கிழங்குகள் தோன்றும். இக்காலமே முகிழ்களின்எண்ணிக்கையை அதிகரிக்கும் காலம் வளர்ச்சி பெற்ற தண்டுகள் ஒவ்வொன்றிலும் முகிழ்கள் தோன்றும் ஆனால் உற்பத்தியாகும் முகிழ்கள் யாவும் பெருங்கிழங்குகளாக வளர்ச்சி பெறுமென்றுமில்லை உற்பத்தியான முகிழ்களில் 50% முகிழ்களே விருத்தியடைந்து பருமனுடைய பெருங்கிழங்குகளை உற்பத்தி செய்கின்றது]

30ம் நாளில் இருந்து 60ம் நாள் வரை அதாவது 6- 8 வது வாரம் வரை கிழங்கு வளர்ச்சியடைந்து பருமன் கூடும் காலமாகும்: இந்நேரம் விவசாயி முக்கியகவனம் எடுக்கவேண்டியகாலமாகும் இந்நேரச்சிறந்த பராமரிப்பு திருப்திகரமான பயிர் பாதுகாப்பு அளவாக நீர்ப்பரிபாலனம் என்பன தகுந்த முறையில் பேணப்படல்வேண்டும்] 60- 90ம் நாள்வரை முதிர்ச்சிப் பருவமாகும்] இந்நேரம் சூரிய ஒளி ஒளித்தொகுப்புக்கு இன்றியமையாதது கிழங்கு சரியான முதிர்ச்சிஅடையாது விடின் நிறை குறைவு படும் மாச் சேகரிக்கும் தன்மை குறைவுபடும். அதனால் விளைவும் பாதிப்படையும். சேமிக்கும் தன்மை குறைவுபடும். அத்துடன் அவியும் தன்மையும் பாதிக்கப்படலாம்;

## மேற்கட்டுப் பசளைப் பிரயோகம்

ஒரு மாத காலத்தில் மண்ணணைக்கும் போது 30:00 20 என்ற ரி.டி.எம். எனும் கலவையின் 130 கி. கி. ஒரு ஏக்கருக்கு (4000ம் கன்றுத் தரைக்கு) இடவும் இது கிடைக்காதவிடத்து அமோனியம் சல்பேட் 100 கி.கி, மி- பொட்டாஸ் 30 கி. கி. என்று கலந்து இடப்படல் வேண்டும்

## மண்ணணைத்தல்

நடுகை முடிந்து 30-35 நாட் பருவத்தில் இரண்டாவது தடவையாக மண்ணணைக்கப்படுகின்றது. மண்ணணைப்பின் முக்கிய நோக்கம் கிழங்குகள் பருமன் அடைவதற்கும், சூரிய ஒளிபட்டு பச்சை நிறமடைவதைத் தடுக்கும் பொருட்டுமேயாகும். மேலும் மண்ணணைத்தல் மூலம் முகிழ் அந்தவின் சேதத்தினையும் கட்டுப்படுத்த முடிகின்றது மண்ணணைக்கும் போது தண்டுகள் நேராக நிமிர்ந்து நிற்கவும், தகுந்த முறையில் சூரிய ஒளி படத்தக்கதாகவும் அங்குரத் தொகுதி குவியலின்றி ஐதாக இருக்கத் தக்க முறையில் மண்ணணைத்தல் மேற்கொள்ளப்படல் வேண்டும்;

## நீர்ப்பரிபாலனம்

நீரானது தாவரத்தின் எல்லாக் கட்டங்களிலும் தேவைப்படுகின்றது. கிழங்கு முளைக்கும் பருவம், கிழங்கு உற்பத்திப் பருவம் உற்பத்தியான கிழங்கின் வளர்ச்சிப் பருவம் ஆகிய பருவங்களில் நீர் அத்தியாவசியமாகத் தேவைப்படுகின்றது. ஆனால் வெள்ளமாக நீர்ப்பாய்ச்சுதல் தவிர்க்கப்படல் வேண்டும் நீரானது சாலின் உயரம் அரைமட்டத்துக்குவருமட்டுமே பாய்ச்சுதல் வேண்டும் நீர்ப்பாய்ச்சும்கால் இடைவெளி மண்ணிரத்துக்கு அமைவாக மேற்கொள்ளலாம் பொதுவாக 4 அல்லது 5 தினங்களுக்கு ஒரு தடவை நீர்ப்பாசனம் மேற்கொள்ளப்படுகின்றது அளவுக்கு அதிகமாக நீர்ப்பாய்ச்சுவது நோய் பரவல் சூழ்நிலையை ஏற்படுத்தும் நிலத்தின் ஈரத்தன்மையைப் பொறுத்து நீர்ப்பாசன இடைவெளியை கணித்துக்கொள்ளலாம்.


## வை· சுப்பிரமணியம்

உதவி விவசாயப் பணிப்பாளர் பணிமனை, திருநெல்வேலி.


## பயிர்ப் பாதுகாப்பு:-

உருளைக் கிழங்குச் செய்கையில் பயிர்ப்பாதுகாப்பில் முக்கிய கவனம் செலுத்தப்படல் வேண்டும், நிலம் பண்படுத்தலிலிருந்து அறுவடைக் காலம்வரை தகுந்த முறையில் பயிர்ச்சுகாதாரம் பேணப்படல்வேண்டும் நோய்பீடை நாசினிகள் பாவிக்கும்போது சிபார்சுக்கமைய உரிய நேரங்களில் தேவையெனக் கண்டால் மட்டுமே பாவனை செய்தல் வேண்டும் தேவைக்கதிகமான இரசாயன நாசினிப்பாவனை பெரும்தீங்குவிளைவிக்கும்பொருளாதாரச் செலவை அதிகரிப்பதுமன்றி சுற்றாடல் சூழலையும் மாசுபடுத்தும் ஆதலின் இது விடயத்தில் சரியான அறிவுறுத்தல்கள் கடைப்பிடிக்கப்படல் வேண்டும்.

அழுக்கணவன், பனிப்பூச்சி சிற்றுண்ணி, ஆமை வண்டு (எபிலக்னா) ஆகியனவும் பயிரைத்தாக்கும். இவற்றைக் கட்டுப்படுத்த கீழ்க் காணும் பீடை நாசினிகளை விசிறலாம்.

அழுக்கணவன்- டைமிதோபேற் அல்லது ஒக்சிடெப் டோன் மீதைல் (மெற்றசிஸ் ரொக்ஸ்) 1 அவு-3 கலன் நீரில் கலந்து விசிறவும்

பனிப்பூச்சி: பென்தயன் (லெபசிட்) அல்லது டைம் தோபேன் அல்லது டயசினோன் அல்லது காபரில் 1 அவு-3 கலன்நீரில்.

சிற்றுண்ணி:- டைக்கோபோல் 1 அவு - 3 கலன் நீரில்;

அல்லது

செந்தகம் 1 1/2 அவு- 3கலன் நீரில்

ஆமைவண்டு (எபிலக்னா) - ரைகுளோர் போன் (டிப்ரெக்ஸ்) 1 அவு- 3 கலன் நீரில்

நோய்களில் பிற்கூற்றுவெளிறல் முக்கியமானதாகும் இந்நோயைக் கட்டுப்படுத்த மன்கோசெப், புறொபினெப் உதாரணம் அன்றிறாக்கோல் அல்லது மெட்டாலைக்சைல் போன்ற பூஞ்சண நாசினிகளில் ஏதாவது ஒன்றை 7- 10 நாட்களுக்கு ஒருமுறைவிசிறல் அவசியமாகும்;

பீடைநாசினிகளை விசிறுகையில் இலைகளின் கீழ்ப்புறம் படத்தக்கதாக விசிறுதல் அவசியமாகும்;

பக்டீரியாவாடல் ஏற்படுவதைத் தடுக்க சொலனேசி குடும்பப் பயிர்கள் செய்த தரைகளைத்தவிர்த்தல்வேண்டும்;

## அறுவடை:-

கிழங்கின் தோல் முற்றி முதிர்ச்சியடைந்த கிழங்குகளே சந்தை மானத்தைக் கொடுக்கின்றது: ஆதலின் அங்குரத்தொகுதியானது காய்ந்த இறக்கும் தறுவாயில் தான் அறுவடைசெய்தல் வேண்டும். கைவிரலால் நாம் ஒரு கிழங்கை எடுத்துத் தேய்க்கும்போது தோல் இலகுவில் எடுபடாதுவிடின் கிழங்கானது அறுவடைக்குத் தயாரானது என்பது அர்த்தமாகும். ஆனால் வளர்ச்சியின் பிற்பகுதியில் சந்தைதமானம் நல்ல நிலையில் இருக்குமாயின் தோல் விரைவில் முற்றச் செய்யவேண்டுமாயின் நிலமட்டத்தில் இருந்து சற்று மேலாகத் தண்டுகளை வெட்டிவிடுவதன் மூலம் தோலை விரைவில் முற்றச் செய்யலாம். ஆனால் நிறை அதிகரிக்காது அறுவடை செய்யும்போது கிழங்குகள் சேதமுறாவண்ணம் கவனம் செலுத்த வேண்டும்.முள் மண்வெட்டி பாவித்து அறுவடைசெய்வதால் கிழங்குகள் சேதமுறுவதைத் தவிர்க்கலாம் பொதுவாக யாழ்குடா நாட்டின் சராசரி விளைச்சல் 6- 8 தொன் ஆகும்.

---

# பிறப்புபத்திர விண்ணப்பம் ஏற்பது தற்காலிகநிறுத்தம்

[கொழும்புத் துறை]

யாழ் செயலக பிறப்பு இறப்பு விவாகப் பதிவாளர் திணைக்களம் கடந்த 01-08-1954 ஆம் ஆண்டிற்குப் பின் பிறந்தவர்களுக்கான இருபக்கம் உள்ள பிறப்புச் சான்றிதழ் பெறுவதற்கு உரிய எழுதும் படிவம் முடிவடைந்துள்ளதால் இச்சான்றிதழ் பெறுவதற்கு விண்ணப்பம் செய்வோரின் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்வது மறு அறிவித்தல்வரை தற்காலிகமாக இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக யாழ் மாவட்ட மேலதிக பிறப்பு, இறப்பு, விவாகப் பதிவாளர் திரு அ. பொன்னம்பலம் அறிவித்துள்ளார்.

1954 ஆம் ஆண்டிற்கு முன்னர் பிறந்தவர்களுக்கான ஒரு பக்கப் பிறப்புச் சான்றிதழ் பெறுபவர்களுக்கான விண்ணப்பம் மட்டும் தற்போது ஏற்கப்படுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை குடும்பப் பதிவு அட்டை பெறுவதற்கு விண்ணப்பம் செய்வோரின் விண்ணப்பங்கள் ஏற்கப்படும் என்றும் இதனைப்பெற விண்ணப்பம் செய்வோர் விண்ணப்பப் படிவத்தில் 'குடும்ப அட்டை' பெற எனக் குறிப்பிடப்பட வேண்டும் என்று அவர் கோரியுள்ளார். [24]

வடக்கு - கிழக்கு மாகாணத்தில்

# 28 விளையாட்டு உத்தியோகத்தர் வெற்றிடம்

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு மாகாணத்திலுள்ள 28 விளையாட்டு உத்தியோகத்தர் பதவிகள் வெற்றிடமாகவுள்ளதாகவும் இவற்றுக்கான ஆட்சேர்ப்பு விண்ணப்பங்கள் விரைவில் கோரப்பட இருப்பதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது;

வடக்கு - கிழக்கு மாகாணத்திலுள்ள 73 பிரதேச செயலாளர் பிரிவுகளில் 45 பிரதேச செயலாளர் பிரிவுகளில் மட்டுமே விளையாட்டு உத்தியோகத்தர்கள்கடமையாற்றி வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# அமைச்சர்களின் ஆடம்பரகார்கள் இன்று ஏலத்தில் விற்பனை

(கொழும்பு)

இன்று சனிக்கிழமை அரசாங்கத்தால் ஏலவிற்பனை செய்யப்படவுள்ள 17 சொகுசு வாகனங்களில் பி- எம்- டபிள்யூ ரக நான்கு வாகனங்களும், பென்ஸ் ரகத்தைச் சேர்ந்த 13 வாகனங்களும் அடங்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

பி. எம். டபிள்யூ ரக காரொன்றின்விலை50லட்சம் ரூபாவொன்பதும் பென்ஸ் ரக காரொன்றின் பெறுமதி 60 இலட்சத்துக்கு அதிகமானதென்பதும் குறிப்பிடத்தக்கது. இவை அனைத்தும் ஐ. தே. க அரசாங்கத்தின் அமைச்சர்களும் ராஜாங்க அமைச்சர்களும் பாவித்தவை என்பது குறிப்பிடத்தக்கது;

# வல்வை மகளிர் ம. விக்கு இலங்கை வங்கி அன்பளிப்பு

(யாழ்ப்பாணம்)

இலங்கை வங்கி வல்வை மகளிர் மகா வித்தியாலய அபிவிருத்தி நிதியத்திற்கு 15 ஆயிரம் ரூபா அன்பளிப்பு செய்வதற்கு அனுமதி கிடைத்துள்ளதாக இலங்கை வங்கியின் வடபிராந்திய அதிகாரி தெரிவிக்கின்றார்.

இலங்கை வங்கியினால் வடமராட்சிப்பகுதியில்உள்ள பாடசாலைகளில் மாணவர்களின் சேமிப்பு பழக்கத்தை ஊக்குவிக்கும் முகமாக புதிய சேமிப்பு கணக்குகள் அறிமுகப்படுத்தப்பட்டன.

இதைத் தொடர்ந்து ஆகக் கூடியளவு சேமிப்பு கிடைத்த பாடசாலையான வல்வை மகளிர் மகாவித்தியாலயத்திற்கு அப்பாடசாலையின் அபிவிருத்தி நிதியத்திற்கு 15000 ரூபா அன்பளிப்பு செய்வதற்கு அனுமதி கிடைத்துள்ளது-

அத்துடன் ஏனைய பாடசாலைகளின் அபிவிருத்திக்கும் அந்தந்த பாடசாலைகளின் சேமிப்புத் தொகையின் ஒரு வீதம் அன்பளிப்பாக வழங்கப்படுவதற்கு அனுமதி கிடைத்துள்ளது; இந்த அன்பளிப்புக்கள் மிக விரைவில் வழங்கப்படவுள்ளதாக இலங்கை வங்கியின் வடபிராந்திய அதிகாரி தெரிவித்தார். (இ)

# வீட்டு நாய்களுக்கு தடுப்பூசி

[யாழ்ப்பாணம்]

சித்தன்கேணியில் செயற்பட்டுவரும் பண்டத்தரிப்பு அரசினர் வைத்தியசாலை கட்டடத்தில் எதிர்வரும் திங்கட்கிழமையன்று நாய்களுக்கு விசர் வராது தடுப்பு ஊசி மருந்து போடப்படவுள்ளது; வீடுகளில் வளர்க்கப்படும் நாய்களை தவறாது கொண்டு வந்து நாய்களுக்கு தடுப்பு ஊசி மருந்து ஏற்றுமாறு சங்கானை பொதுச்சுகாதார பரிசோதகர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

# கொப்பேகடுவ மரணம் நாம் அறியவில்லை

## தீவகத்திலிருந்து திரும்பியோர் தகவல்

(யாழ்ப்பாணம்)

கடந்த இரண்டு வருடங்களுக்கு முன் அதவாது 92-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் தீவகம் - அராலித்துறைப் பகுதியில் விடுதலைப்புலிகள் நடாத்திய கண்ணிவெடித் தாக்குதலில் டென்சில் கொப்பேகடுவ உட்பட ஒன்பது சிறிலங்காப் படை உயரதிகாரிகள் கொல்லப்பட்டமை பற்றி தற்போதும் தீவகத்தில் வசிக்கும் பொதுமக்கள் சிலருக்கு எதுவும் தெரியாதுள்ளதாக கூறப்படுகின்றது. வெளியிடங்களில் இருந்து தொடர்பேதும் அற்ற தீவகப் பிரதேசத்தில் எவரிடமும் வானொலிப்பெட்டி இல்லையென்றும், புதினப் பத்திரிகை எதுவும் இங்குள்ளவர்களுக்கு கிடைப்பதில்லையென்றும் இதனாலேயே தாம் வாழும் இடத்தில் நடந்த இச் சம்பவம் பற்றி அவர்களுக்கு தெரியவில்லை என்றும் தீவகத்தில் இருந்து அண்மையில் யாழ் வந்த வயோதிபர்கள் மூலம் அறியமுடிகின்றது இவ் வயோதிபர்களில் ஒருவரை எமது செய்தியாளர் சந்தித்து மேற்படி தாக்குதல் சம்பவம் பற்றிக் கேட்ட பின்னரே அவருக்கு அப்படி ஒரு தாக்குதல் தான் வாழ்ந்த பகுதியில் நடைபெற்றிருந்தமை தெரிய வந்தது. வாய்வழியாக கூறுவதானாலும் அதனை சிறிலங்காப் படையினரோ அல்லது ஈ.பிடி.பியினரோ தான் கூறவேண்டும். அவர்களோ தமது தரப்பில் பாரிய இழப்பை ஏற்படுத்திய இப் பயங்கரம் பற்றி வாயே திறக்கவில்லையாம், பின்னைய காலங்களில் தீவகத்திலுள் ஊடுருவி விடுதலைப்புலிகள் நடாத்திய ஒரு சில தாக்குதல்கள் பற்றியும் படையினரின் உயிரிழப்பு பற்றியும் தாம் அறிந்து கொள்ள முடிந்தது என்றும், அதுவும் தாங்கள் வசித்த வீட்டிற்கு மிக அண்மையில் இவை நடந்தமையினாலேயே இவ்வாறு தெரிந்து கொண்டதாகவும் சம்பந்தப்பட்ட வயோதிபர் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார். (22)

# வாக்கிற்கு ரூ1000

ஒவ்வொரு வாக்களிப்பு நிலையத்திலிருந்தும்500 வாக்குகளை ஐ. தே. கட்சியினர் தலா 1000 ரூபாப் படி பெற திட்டமிடப் பட்டுள்ளதாக பொ. ஐ. முன்னணியின் பொதுச் செயலாளர் தி. மு. ஜெயரட்ண தெரிவித்துள்ளார்.

சிந்தனைக்கு

போரும் இல்லை சமாதானமும் இல்லை என்று உலகை வெப்பமானி காட்டும்போது இராணுவ முடிவை பின்பற்றுவதா அரசியல் முடிவை பின்பற்றுவதா எனக் கூறுவது கடினம்-

-ஜோன் போஸ்ட்டர் டலஸ்-

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 05- 11- 1994
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2024
தபால் பெட்டி எண் - 05

# ஆயுதக் கொள்வனவும் நிதி ஒதுக்கீடும்

பொதுஜன ஐக்கிய முன்னணி பதவி ஏற்று இரண்டு மாத காலத்திற்குள் குறை நிரப்பு பிரேரணை மூலம் 530 கோடி ரூபாவை பாதுகாப்பு செலவீட்டிற்கென ஒதுக்கீடு செய்துள்ளது இதில், பெருமளவு நிதி ரஷ்யாவில் இருந்து எம். ஐ. 18 ரக உலங்குவானூர்திகளைக் கொள்வனவு செய்யப் பயன்படுத்தப்படும் எனவும் அறிய முடிகின்றது.

இவ் 530 கோடி ரூபா ஒதுக்கீட்டுடன் நேரடியான வருடாந்த செலவீட்டில் பாதுகாப்பு அமைச்சு மொத்தம் 2530 கோடி ரூபாவைத் பெற்றுக் கொண்டுள்ளது. இது சிறிலங்காவின் வருடாந்த செலவீட்டில் 27 வீதத்திற்கும் மேலானதாகும்.

இந்நிலையானது உள்நாட்டுப் போர் ஒன்றிற்கு அதிகமான தொகை செலவிடும் நாடுகளில் சிறிலங்காவை முன்னணியில் நிறுத்தியுள்ளது; அண்டை நாடுகளுடன் எப்பொழுதும் முறுகல நிலையில் உள்ள, அதாவது அன்னிய நாடுகளுடன் போரிட என்றும் தயாராக இருக்கும் ஈராக், பாகிஸ்தான், இஸ்ரேல் போன்ற நாடுகளே இவ்வாறான உயர்ந்தளவு வீதாசாரத்தை இராணுவச் செலவீட்டிற்கு ஒதுக்கிவருகின்றன. இந்த வகையில் சிறிலங்காவில் உள்நாட்டுப் போருக்கு ஒதுக்கும் நிதி ஓர் உச்ச கட்டச் செலவீடே ஆகும்.

இவ்வாறான உயர்ந்த பட்ச ஒதுக்கீடு கடந்த சில வருடங்களாகவே இடம்பெற்று வருவதினால் இங்கு அது பற்றிப் பிரஸ்தாபிப்பது நோக்கமுமல்ல, அவசியமுமல்ல; ஆனால். பதவி ஏறியதும் யுத்தத்தை நிறுத்துவோம் என தேர்தல் வாக்குறுதியளித்துப் பதவிக்கு வந்த பொ. ஐ முன்னணி அரசாங்கம் இராணுவச் செலவீட்டிற்கென ஒரு பெருந்தொகையை குறைநிரப்பு பிரேரணை மூலம் வழங்க முன்வந்துள்ளமையே இங்கு முக்கியமானதாகும்;

பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றதும் இனப்பிரச்சினைக்கு சமாதானமான முறையில் தீர்வு காண்பதென விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் பேச்சுவார்த்தையை ஆரம்பித்தமை உண்மைதான். ஆனால் சமாதானப் பேச்சுவார்த்தை ஒரு புறம் நடைபெற்றாலும் - தற்பொழுது இடைநிறுத்தப்பட்டுள்ளது - சிறிலங்கா இராணுவத் தரப்பின் செயற்பாடுகள் நிறுத்தப்படவோ அன்றிக் குறைக்கப்படவோ இல்லை

சமாதானப் பேச்சுவார்த்தைக்கு அனுசரணையாக யுத்தநிறுத்தம் ஒன்றை மேற்கொள்வதற்கு இராணுவத்தரப்பு மறுத்தது. மேலும் யாழ். குடாநாட்டிற்கான தரைவழிப் பாதையையும் திறந்துவிட அது தயாராக இருக்கவில்லை. அத்தோடு தடைசெய்யப்பட்ட பொருள்கள் மீதான கட்டுப்பாட்டை பெரியளவில் தளர்த்தவும் அது ஒப்புக்கொள்ளவில்லை.

மறுவளமாக இராணுவ நடவடிக்கைகளைத் தொடர்ந்தும் மேற்கொண்டது. அப்பாவித் தமிழர்கள் மீதான தாக்குதல்களையும் தொடர்ந்தது. இதில் சிறிலங்காவின் கடற்படை முனைப்பாகச் செயற்பட்டது. கரையோரக் கடல்களில் மீன்பிடியில் ஈடுபட்ட அப்பாவி மக்களை ஈவிரக்கமின்றிக் கொன்று வருகின்றது.

இவ்வாறு பிடிவாதத்துடன் தமது நடவடிக்கைகளை நிறுத்தாமல் செயற்பட்ட இராணுவத் தரப்பு அதற்கேற்ப இராணுவ விரிவாக்க நடவடிக்கைகளையும் மேற்கொண்டே வந்தது. இராணுவத்திற்கு ஆட்சேர்ப்பு நவீன ஆயுத தளபாடங்களைக் கொள்வனவு செய்தல் என்பவற்றில் தீவிர அக்கறையுடையதாகவே அது இருந்தது.

இதேசமயம் புதிதாகப் பதவி ஏற்ற அரசாங்கம் முன்னைய ஆட்சியாளர்கள் - ஐ. தே. க - கடந்த காலத்தில் செய்துகொண்ட ஒப்பந்தங்கள்யாவும் மோசடித்தனமானவை, ஊழல் நிறைந்தவை எனக் குற்றஞ்சாட்டிக் கொண்டதோடு, சதிரடி நடவடிக்கை போன்று அவ் ஒப்பந்தங்கள் பலவற்றை இடைநிறுத்தின. இவ்வாறு இடைநிறுத்தப்பட்ட ஒப்பந்தங்களில் ஆயுதக்கொள்வனவு ஒப்பந்தங்களும் முக்கியமானவையாகும். இவ் ஆயுதக்கொள்வனவில் பாதுகாப்பு அமைச்சின் உயர் அதிகாரிகள், இராணுவ அதிகாரிகள் மற்றும் அரசியல்வாதிகள் பெருமளவு தரகுப் பணம் பெற்றதாகவும் குற்றச்சாட்டுக்கள் வைக்கப்பட்டன.

ஆனால் எக்குற்றச்சாட்டுக்கள் யார்மீதும் வைக்கப்பட்டபோதும் இராணுவ தலைமையோ பாதுகாப்பு அமைச்சோ தமது செயற்பாட்டை மாற்றவுமில்லை, குறைக்கவுமில்லை: இராணுவ தயாரிப்புகளை மேற்கொண்டே வந்தன. இந்த நிலையில் புதிய அரசாங்கத்தின் நிதி ஒதுக்கீடும் ஆயுதக் கொள்வனவிற்கான அனுமதியும் இராணுவம் அரசாங்கத்தை வெற்றி கொண்டுள்ளது என்றே கொள்ள வேண்டியுள்ளது. இல்லாது போனால் அரசாங்கம் சமாதானம் குறித்து நம்பிக்கையுடனும், நேர்மையுடனும் செயற்படவில்லை என்ற முடிவிக்கே எவரும் வரவேண்டியிருக்கும்.

# குறுகிய அரசியல் நோக்கங்களால் முன்னைய பேச்சுகள் தோற்றன

## முன்னாள் கலவான எம். பி. குணசேகர

(கொழும்பு)

இலங்கை இன்று உத்தியோகப்பற்றற்ற முறையில் இரண்டாகப் பிளவுபட்டுவிட்டது இன்று எமது முயற்சியானது துண்டாடப் பட்டுவிட்ட நாட்டை ஒன்றுசேர்ப்பதேயாகும் என முன்னாள் கலவான எம். பி டியூ குணசேகர தெரிவித்தார்.

'யுத்தம் வேண்டாம்' எனும் தலைப்பில் இரத்தினபுரியில் நடைபெற்ற கருத்தரங்கில் உரையாற்றிய அவர் இன்று வடக்கு-கிழக்கில் யுத்தம் 11 வருடங்களுக்கு மேலாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது இந்த யுத்தம் காரணமாக தமிழ் மக்கள் தேசிய நீரோட்டத்திலிருந்து ஒதுங்கி விட்டனர். இதன் காரணமாகவே இன்று இன ரீதியிலான-மொழி ரீதியிலான கட்சிகள் தோன்றியுள்ளன.

தமிழ் சிங்கள மக்களுக்கிடையிலான இப்பிணக்கை தோற்றுவித்த பொறுப்பை சிங்கள தமிழ் பணக்கார வர்க்கத்தினரே ஏற்க வேண்டும் சாதாரண சிங்கள-தமிழ் முஸ்லிம் மக்களிடையே எவ்விதமான இனத்துவேஷமும் கிடையாது. என்னதான் சமாதான பேச்சுவார்த்தைகளை மேல்மட்டத்தில் பேசினாலும் பயன் ஏற்படப்போவதில்லை: கீழ்மட்டத்தில் சிங்கள, தமிழ் முஸ்லிம் மக்களிடையே ஒரு இணக்கப்பாட்டை ஏற்படுத்துவதே இப்பிரச்சினைக்கு ஒரு நிரந்தர தீர்வை காண, பயன் தரும். கீழ்மட்ட மக்களிடையே ஒரு இணக்கப்பாடு ஏற்படாததன் காரணமாகவே பண்டா- செல்வா, டட்லி-செல்வா ஏன் அண்மையில் ஏற்பட்ட ஜே. ஆர். -ராஜீவ் ஒப்பந்தங்கள் கூட வெற்றியளிக்கவில்லை எதிர்காலத்தில் சந்திரிகா - பிரபா உடன்படிக்கையொன்று ஏற்பட்டால்கூட கீழ்மட்ட மக்களிடையே ஒரு புரிந்துணர்வு இணக்கப்பாடு காணப்படாவிட்டால் அது வெற்றியளிக்கப்போவதில்லை-

கடந்த 40 வருடங்களுக்கு மேலாக பரம வைரிகளாக இருந்த பலஸ்தீன- இஸ்ரேல் நாடுகளின் தலைவர்கள் யுத்தத்தை ஒரு முடிவுக்குக் கொண்டுவர விரும்பி சமாதான உடன்படிக்கை செய்து கொண்டனர் 100 வருடங்களுக்கு மேல் நீடித்த அயர்லாந்து யுத்தத்திற்கு முடிவுகாண விரும்பிபிரிட்டனும் அயர்லாந்தும் சமாதானத்திற்கு முன்னோடியாக யுத்த நிறுத்தமொன்றுக்கு வழி கோலி வருகின்றன-யூகோஸ்லாவிய-பொஸ்னிய பிரச்சினைக்கும் யுத்தத்தைத் தவிர்த்து சமாதான பேச்சுவார்த்தை மூலம் சமாதானத்தைதோற்றுவிக்க முயற்சி எடுக்கப்பட்டு வருகிறது- சுருங்கக் கூறின் இன்று முழு உலகமே சமாதான பேச்சுவார்த்தையில் நம்பிக்கை கொண்டிருக்கும் வேளையில் இலங்கையில் அரசு- புலிகளுக்குமிடையில் மாத்திரம் ஏன பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காணமுடியாது? யுத்தத்தின் அழிவுகளை இருதரப்பினருமே உணர்ந்துள்ளனர்- அதனால் இப்பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலம் அரசியல் தீர்வு காணுமாறு நாட்டு மக்கள் இருதரப்பினரையுமே வற்புறுத்த வேண்டும்.

முன்னைய சமாதானப்பேச்சுக்கள் தோல்வி கண்டதற்கு ஏதுவான மூன்று பிரதான காரணங்களைக் கூறலாம்.

இந்த நாட்டின் பெரும்பான்மை மக்கள் சமாதானத்தின் அவசியத்தை உணர்ந்திருக்கவில்லை அல்லது உணர்த்தப்படவில்லை-

இனப்பிரச்சினையின் மேல்மட்டமான சுயரூபம் மட்டுமே கவனத்தில் எடுக்கப்பட்டது பிரச்சினையின் உண்மைநிலை உணரப்படவில்லை. பிரச்சினையை உணர்ந்திருந்தாலும் அதற்கு யதார்த்த பூர்வமான தீர்வுகளை காண முயற்சிக்காமை சுருங்கக் கூறின் குறுகிய அரசியல் நோக்கத்துடனேயே பேச்சுவார்த்தைகள் நடாத்தப்பட்டதே தவிர இனப் பிரச்சினைக்கு உண்மையான அரசியல் தீர்வு காண வேண்டுமென்ற அக்கறையிருக்கவில்லை- ஆனால் இன்று இரு பிரதான கட்சிகளின் ஜனாதிபதிவேட்பாளர்களுமே இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வுகாணப்பட வேண்டுமென்பதை வலியுறுத்துகின்றனர்- இனப்பிரச்சினை இருப்பதாக கூறுபவர்கள் அதன் உண்மை நிலையை உணரத் தலைப்பட்டுள்ளனர் தீர்வொன்றைக் காண விளைவோரும் அதனை யதார்த்த பூர்வமாக அணுக தலைப்பட்டுள்ளனர் என்றார்.

# தேர்தல் பிரசாரத்திற்கு சிறிமா செல்லாமைக்கு

# பாதுகாப்பு காரணமல்ல துக்கமே காரணமாம்

சிறிமா திசாநாயக்கா தேர்தல் பிரசார கூட்டங்களிற்கு சமுகமளிக்காதது பாதுகாப்பு காரணமல்ல கணவரின் கொலை தொடர்பான துக்கமே காரணம் என ஐக்கிய தேசியக் கட்சியின் பேச்சாளர் தெரிவிக்கின்றார்.

ஐ.தே.கட்சியின் ஜனாதிபதி வேட்பாளரும் எதிர்க்கட்சி தலைவருமான காமினி திசாநாயக்கா கொலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து ஜனாதிபதி வேட்பாளராக அவரது மனைவி சிறிமா திசாநாயக்கா தெரிவு செய்யப்பட்டது தெரிந்ததே.

இவர் தேர்தல் பிரசார கூட்டங்களிற்கு சமுகமளிப்பதில்லை இதற்கு அவரது கணவர் கொலை செய்யப்பட்டது தொடர்பான மனத்துக்கமே காரணம் என தெரிவிக்கப்படுகிறது.

# புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

1994 - 11- 05

சனி இரவு

08. 01- அறிவியற் கலசம்
08. 10- நிகழ்வும் பகிர்வும்
08. 25- நேயர் கடிதங்கள்
08. 30- செய்திகள்
08. 40- மேஜர் கணேஷ் நினைவாக சிறப்பு நிகழ்ச்சி
9. 00 மணிக்கு இரவு நிகழ்ச்சிகள் யாவும் நிறைவு பெறும்.

1994- 11- 06

ஞாயிறு காலை

07. 02- மாவீரர் வணக்கம்
07. 15- களத்தில் மலர்ந்தவை
07. 30- செய்திகள்
07. 35- பத்திரிகைச் செய்திகள்
07. 40- களத்தில் மலர்ந்தவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி
08. 00 மணிக்கு காலை நிகழ்ச்சிகள் யாவும் நிறைவுபெறும்.

# காமினி காட்டிய பாதையில் செல்வதே எனது இலட்சியம்

## சிறிமா திசாநாயக்கா தெரிவிப்பு

(கொழும்பு)

காமினி காட்டிய பாதையிலே ஐக்கிய இலங்கையை உருவாக்குவதே எனது முக்கிய நோக்கமாக இருக்கின்றது இதற்கு சகலரும் ஒத்துழைப்பு வழங்கவேண்டும் என ஐ. தே. கட்சியின் ஜனாதிபதி வேட்பாளரான சிறிமா திசாநாயக்கா நேற்று ரூபவாகினியில் இடம்பெற்ற தேர்தல் பிரசாரத்தில் தெரிவித்தார்.

தொடர்ந்து அவர் தெரிவிக்கையில் காமினி நாட்டையும் நாட்டு மக்களின் ஜனநாயகத்தையும் விரும்பிய ஒருவர் என்றும் அவருடைய விருப்பத்தை நிறைவேற்றுவதுதான் தனது இலட்சியம் என்றும் கூறினார்

அவர் நாட்டை நதியின் கிளைகளில் இருக்கும் சிறிய ஊற்றுக்கள் போல் கருதவில்லை கிளைகள் எல்லாம் சேர்ந்து ஓடும் நதியைப் போல் கருதினார் சகல இனங்களின் ஒற்றுமையை பிரதிபலிக்கும் ஒரு நாடாக கருதினார் இந்த இலட்சியத்தையே நானும் கொண்டுள்ளேன் முழு நாட்டுக்கும் சமாதானத்தையும் சௌபாக்கியத்தையும் கொண்டு வருவதே எனது அவா வாகும்

காமினி இறந்த துயரத்தை தாங்கமுடியாமல் இருக்கும் எனக்கு மக்களிற்கு விடிவை ஏற்படுத்தவேண்டும் என்ற பேரவாவினாலேயே இந்த தேர்தலில் பங்கு கொள்ள முடிவு எடுத்தேன் எனவும் அவர் தெரிவித்துள்ளார்

# அரசு - விடுதலைப்புலிகள் பேச்சு கிளின்ரன் அரசு வரவேற்பு

இனப்பிரச்சினை தீர்விற்கு இலங்கையின் புதிய அரசு எடுக்கும் நடவடிக்கைகளை கிளின்ரன் அரசு வரவேற்பதாக அமெரிக்க அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

அரச எம். பியான எம் எம் சுகையின் அண்மையில் வாஷிங்டன் சென்றிருந்தார் அவர் அங்கு தெற்காசிய விவகாரங்களுக்கான உதவி வெளியுறவு அமைச்சர் திமோதி மைக்கல் சனேயை சந்தித்து பேசிய போது மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டது. வடக்கு- கிழக்கு யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வந்து பிரச்சினைக்கு தீர்வு காணும் முகமாக அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட்டமை இச்சந்திப்பின்போது கவனத்திற்கு எடுக்கப்பட்டது. இது தொடர்பாக எடுக்கப்பட்ட முயற்சிகளை அமெரிக்க அரசு வரவேற்றுள்ளது

இப்பேச்சுக்களின் போது அமெரிக்க தரப்பில் ஐரோப்பிய விவகாரங்களுக்கான உதவி வெளிவிவகார அமைச்சரும் உடனிருந்தார்.

# தீ விபத்து

(கொழும்பு)

கொழும்பு கோட்டையில் உள்ள பாட்டா பாதணி விற்பனை நிலையத்தில் நேற்று முன் அதிகாலை பெரும் தீ ஏற்பட்டது ஒரு மணி நேரத்தின் பின் தீ கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரப்பட்டது.

# காமினி இறந்த பின்பே அவர் குறித்து அரசு கூடுதலாக அஞ்சுகின்றது

## ஐ.தே.க வின் பொதுச்செயலர் காமினி அத்துகோரள

(கொழும்பு)

எவ்வித இடையூறுகள் ஏற்பட்டாலும் எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் ஐ. தே. க. வெற்றி பெறவேண்டும் என்பதே எமது நோக்கம் என ஐ தே. க.வின் புதிய பொதுச் செயலர் காமினி அத்துகோரள தெரிவித்துள்ளார். அண்மையில் சிறிகோத்தாவில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கேள்வி: ஐ. தே. க வின் பொதுச் செயலர்களாக இருந்த ஹர்ஷா அபேவர்தனா நந்தலால் பெர்ணாண்டோ, ரஞ்சன் விஜேரட்ன, காமினி விஜயசேகர ஆகிய நான்கு பேரும் கொல்லப்பட்டுவிட்ட நிலையில் உங்கள் நியமனம் குறித்து என்ன கருதுகின்றீர்கள்?

பதில்: நெருக்கடியான ஓர் நிலையில் நான் நியமிக்கப்பட்டுள்ளேன். எனது உயிருக்கு ஆபத்து விளைவிக்கப்பட்டு நான் பலியானால் கூட கட்சி தொடர்ந்து செயற்படவேண்டும்.

கேள்வி: காமினி உயிருடனிருந்தால் கட்சியின் நிலை எப்படியிருக்கும்?

பதில்: எமக்கு நல்ல வாய்ப்பு இருந்திருக்கும். பாராளுமன்ற தேர்தலின் பின் இரு தரப்பு கட்சிகளிடையேயும் நெருக்கமான போட்டியிருந்தது.

கேள்வி: சிறிமா திசாநாயக்கா ஜனாதிபதி வேட்பாளராக நிற்பதுகுறித்து ஐ. தே.க. விற்கான வாய்ப்பு எப்படிஉள்ளது?

பதில்: இப்போது அதன் நிலைமையை கூற முடியாது

கேள்வி: காமினியின் இறுதிச் சடங்கு தொலைக்காட்சியில் நேரடியாக ஒளிபரப்பப்பட்டால் அது ஐ. தே. கவிற்கு வாய்ப்பாகி விடும் என அரசு கருதியது. இது குறித்து உங்கள் கருத்து?

பதில்: காமினி உயிரோடு இருந்ததைவிட அவர் மரணமான பின்பே அரசு அச்சம் கொண்டுள்ளது என்பதை இது காட்டுகின்றது. சந்திரிகாவின் கணவர் விஜயகுமாரதுங்க இறந்தபோது ஐ தே.க அரசு அனைத்து வசதிகளையும் அவரின் மரணச் சடங்கிற்காக வழங்கியது கிராமசபை தலைவராகக் கூட இல்லாத நிலையில் இருந்த விஜயகுமாரதுங்கவிற்கு இவ் வசதிகள் அளிக்கப்பட்டது. அப்போது சந்திரிகாவிற்கு காமினி தனது மகாவலியின் 32 பாதுகாப்பு ஊழியர்களை அவரின் பாதுகாப்பிற்காக கொடுத்திருந்தார். ஆனால் இவை அனைத்தும் பதிலுக்கு எமக்கு காட்டப்படவில்லை.

# மீளக் குடியமர்தலுக்கு 225 கோடி மேலதிகநிதி

(கொழும்பு)

வடக்கு-கிழக்கில் முழு அளவிலான புனர்வாழ்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன இடம் பெயர்ந்த மக்களை அவர்களது சொந்த இடங்களில் மீளக் குடியேற்றுதல், சிவில் நிர்வாகத்தை மீள நடைமுறைக்குக் கொண்டு வருதல் போன்ற பணிகளுக்கென வரவு செலவுத்திட்டத்தில் ஒதுக்கப்பட்ட நிதியிலும் மேலதிகமாக 225 கோடி ரூபாவை ஒதுக்குவதற்கு அரசு முடிவு செய்துள்ளது.

# கடந்த காலங்களில் இருந்து பாடம் கற்க வேண்டும்

## ஐ. தே. க ஜனாதிபதி வேட்பாளர்

(கொழும்பு)

நாம் அனைவரும் கடந்த கால வரலாற்றில் இருந்து பாடத்தைக் கற்றுக்கொள்ள வேண்டும் என சிறிலங்காவின் ஐ தே.கட்சி ஜனாதிபதி வேட்பாளரான திருமதி சிறிமா திசாநாயக்க கேட்டுள்ளார்.

நேற்று முன்தினம் வானொலியில் உரை நிகழ்த்திய அவர் இந்நாட்டில் இருபெரும் கட்சிகளான பொதுஜன ஐக்கிய முன்னணியும் ஐக்கிய தேசியக் கட்சியும் நிறைவேற்று அதிகாரங்கள் கொண்ட ஜனாதிபதி ஆட்சிமுறையை மாற்றுவதற்கு ஒன்று சேர்ந்து உழைக்க வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்.

நாட்டை துக்ககரமான நிலையிலிருந்து மீட்பதற்கு அனைவரும் நேர்மையான முறையில் முயற்சி செய்ய வேண்டும். வெறுப்பும் பொறாமையும் முற்றுப்பெற வேண்டும். வருங்கால சந்ததியினர் சமாதானமாகவும் ஒற்றுமையாகவும் வாழ்வதற்கு வேண்டிய சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டும் என்று அவர் கேட்டுக் கொண்டார்

இதே வேளை எனக்காக அல்ல, ஐ தே.க வின் எதிர்காலத்திற்காகவாவது நாம் வெற்றிபெற வேண்டும்; ஐ தே.க வின் வெற்றியை உறுதிப்படுத்த அனைவரும் ஐக்கியமாக பாடுபட வேண்டும் என கடந்த செவ்வாயன்று ஐக்கிய தேசியக்கட்சியின் பாராளுமன்றக் குழுக் கூட்டம் ரணில் விக்கிரமசிங்கா தலைமையில் கூடியபோது. அங்கு உரையாற்றிய திருமதி சிறிமா திசாநாயக்கா வேண்டுகோளை விடுத்துள்ளார்.

# யாழ். மாநகரசபை ஊழியர்களுக்கு அடுத்தாண்டு முதல் சீருடை

(யாழ்ப்பாணம்)

யாழ் மாநகரசபை ஊழியர்கள் அடுத்த ஆண்டு தொடக்கத்தில் இருந்து சீருடை அணிந்தே தமது கடமைகளுக்குச் செல்வர் என யாழ் மாநகரசபை வட்டாரங்கள் தெரிவித்தன.

இதற்கான நடவடிக்கைகள் தற்சமயம் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரியவருகின்றது. இதற்கென கொழும்பில் இருந்து சீருடை எடுத்துவரப்படவுள்ளது.

யாழ் மாநகர சபையைச் சேர்ந்த சுகாதார ஊழியர்களுக்கும், சுத்திகரிப்புத்தொழிலாளர்களுக்கும் மற்றும்வெளிக்கள உத்தியோகஸ்தர்களுக்கும் வெவ்வேறு விதங்களில நிறங்கள் கொண்ட சீருடை வழங்கப்படவுள்ளது. இதில் நிர்வாகப் பகுதியினருக்கு மட்டும் சீருடை இல்லை என அவ் வட்டாரங்களில் இருந்து தெரியவருகின்றது. (பா)

# வத்தளையில் 6 பேர் கைது

(கொழும்பு)

காமினி திசாநாயக்காவின் கொலை தொடர்பாக வத்தளையில் 6 பேர் பொலிசாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

# சிறிமா வேட்பாளர் நியமனத்தை சட்டபூர்வமற்றதென அறிவிக்குக

## ஏ. ஜே. ரணசிங்கா நீதிமன்றத்தில் வழக்கு

ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளராக தெரிவு செய்யப்பட்டுள்ள திருமதி சிறிமா திசாநாயக்காவிற்கும், மேலும் ஏழு பேருக்கும் எதிரான மனு ஒன்று கொழும்பு மாவட்ட மேலதிகநீதிமன்றத்தில்நேற்று மாலையில் ஜனாதிபதி வேட்பாளரும், முன்னாள் அமைச்சர் ஏ ஜே ரணசிங்கா சார்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

திருமதி சிறிமா திசாநாயக்கா ஐ. தே. கவின் சார்பில் போட்டியிடுவது சட்டரீதியானது அல்ல என்று அறிவிக்கும்படி நீதிமன்றத்தை இம் மனு கோரியுள்ளது. இம் மனுவில் ஐ தே. க சார்பில் திருமதி சிறிமா திசாநாயக்கா தேர்தல் பிரசாரத்தில் ஈடுபடுவது தடுக்கப்பட வேண்டும் என்றும் கோரப்பட்டுள்ளது.

பிரதமர் திருமதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்கா உட்பட ஜனாதிபதி தேர்தல் வேட்பாளர்கள் அனைவரும், தேர்தல் ஆணையாளர் சந்திரானந்த டி சில்வா, ஐ. தே. க. பொதுச் செயலாளர் காமினி அத்துகோரளை, தஹம் விமலசேன ஆகியோர் இம் மனுவில் எதிராளிகளாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளனர்.

முதலாவது பிரதிவாதியான திருமதி சிறிமா திசாநாயக்கா ஐ. தே. கவின் சார்பில் பிரதி வேட்பாளராகப் போட்டியிடுவது சட்டபூர்வமற்றது என்றும் அவரும், அவரது ஆதரவாளர்களும் தேர்தல பிரசாரத்தில் ஈடுபடுவது தவிர்க்கப்பட வேண்டும் என்றும் கட்டளை பிறப்பிக்கும்படி இம் மனு கோரியிருக்கிறது.

இம் மாதம் ஒன்பதாம்திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தலில் திருமதி சிறிமா திசாநாயக்கா ஒரு வேட்பாளர் அல்ல என்று பகிரங்கமாக தெரிவிக்க வேண்டும் என்றும் ஏ. ஜே. ரணசிங்கா தமது மனுவில் கோரிக்கை விடுத்துள்ளார்.

அத்துடன் வழக்குசெலவாக சுமார் ஒரு லட்சம் ரூபா தமக்கு வழங்கப்படவேண்டும் எனவும் அவர் கோரியிருக்கிறார்.

# மணலாற்றில்காவலரண்மீதுதாக்குதல் இரு படையினர் பலி, பலர் காயம்

(கொழும்பு)

மணலாற்றுப் பகுதியில் சிறிலங்கா காவலரண்மீது விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் இரு இராணுவத்தினர் பலியானதாகவும் மேலும் பலர் காயமடைந்ததாகவும் சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன

மணலாறு பகுதியிலுள்ள ஜயசிங்கபுர இராணுவக் காவல் அரண் மீது நேற்று முன்தினம் தாக்குதல் நடத்தியபோதே இவ்விரு படையினரும் கொல்லப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது

# அரசு – புலிகள் பேச்சுவார்த்தை; இந்திய அரசு தீவிர அக்கறை

## தகவல் திரட்டத் தனிப் பிரிவு

சிறிலங்கா அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான பேச்சுவார்த்தைகள் பற்றிய தகவல்களை திரட்டுவதற்கும், மற்றும் தமிழ்-சிறிலங்கா அரசியல் நிலைமைகள் பற்றிய தகவல் திரட்டுவதற்கும் தனியான தகவல் சேகரிப்பு மற்றும் அவதானிப்பு பிரிவு ஒன்றை இந்திய அரசு அமைத்துள்ளது

அதேவேளை இலங்கை தொடர்பான அக்கறைக்குரிய விடயங்கள் பற்றி மத்திய அரசுக்கு ஆலோசனை வழங்க தமிழக அரசு தனியான திணைக்களம் ஒன்றை அமைக்க வேண்டுமென யோசனை கூறப்பட்டுள்ளது இலங்கைக்கான இந்தியாவின் முன்னாள் தூதுவர் தோமஸ் ஏபிரகாம் இத்தகவலை வெளியிட்டிருப்பது குறிப்பிடத்தக்கது

# ரிவுலப்பிட்டியில் புதைகுழி; 35 பேரின் எலும்புக்கூடுகள் மீட்பு

(கொழும்பு)

திவுலப்பிட்டியிலுள்ள புதைகுழி ஒன்றை நேற்று முன்தினம் தோண்டிய போது பெருந்தொகையான மனித எலும்புகள் கண்டெடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவற்றுள் மண்டையோடுகள்முள்ளந்தண்டுகள், தோள்பட்டை எலும்புகள் என்பன காணப்பட்டன கிடங்கிலிருந்து பெரிய ஆணிகள் சிலவும் கண்டெடுக்கப்பட்டுள்ளன இக்கிடங்கில் 25 தொடக்கம் 35 வரையானோர் புதைக்கப்பட்டிருக்கலாமென பொலிசார்தெரிவித்துள்ளனர் 89-ம் ஆண்டில் இப்பகுதியில் டயர்கள் மீது எரியும் சடலங்கள் ஒரு வார காலம் வரை வில்லங்குகளுக்கு இரையாகி வந்ததாகவும், தெரிவிக்கப்பட்டுள்ளது;

## உதைபந்தாட்டம்

யாழ் மாவட்டப் பாடசாலைகள் விளையாட்டு அபிவிருத்திக் குழு நடத்தும் 15 வயதுப் பிரிவு உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று பி ப 2.15 மணி நெல்லியடி ம.ம. வித்தியாலயத்தில்.

யாழ்- கரணவாய் பொன்னம்பலம் எதிர் யாழ் உரும்பிராய் இந்து. மானிப்பாய் இந்து எதிர் வல்வை சிவகுரு வித்தியாலயம், உடுப்பிட்டி அமெரிக்கன்மிசன் எதிர் சண்டிலிப்பாய் இந்து ம. வித்தியாலயமும் விளையாடும்.

யாழ்- இந்துமைதானத்தில் யூனியன் கல்லூரி எதிர் புனித ஜேம்ஸ் ம. வித்தியாலயம், முத்துத்தம்பி ம வித்தியாலயம் எதிர் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியும் விளையாடும்.

கொக்குவில் இந்துவில் அராலிஇந்து எதிர் அருணோதயக் கல்லூரி, சாவகச்சேரி இந்து எதிர் சோமஸ்கந்தாக் கல்லூரி, புனிதஜோசப் ம.வி எதிர் கோண்டாவில் இராமகிருஷ்ண ம. வித்தியாலயமும் விளையாடும்;

## தொண்டமானிடமிருந்து

# சுற்றுலாதுறை அமைச்சு மீளப் பெறப்படும்

ஜனாதிபதிதேர்தலில்நடுநிலை வகிக்கப்போவதாக தொண்டமான் கூறியபோதிலும் இந்தியா சென்றுள்ள அவர் நாடு திரும்பியதும் பிரசாரத்தில் ஈடுபடுவார் என தர்மசிறி சேனநாயகா குறிப்பிட்டுள்ளார்

ஜனாதிபதித் தேர்தல் முடிந்ததும் தொண்டமானுக்கு வழங்கியுள்ள சுற்றுலாத் துறை அமைச்சர் பதவியை திரும்ப கேட்கவுள்ளதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்

மந்திரிசபை தீர்மானங்களை அறிவிப்பதற்காகக் கூட்டப்பட்ட பத்திரிகையாளர் மாநாட்டில் தொண்டமானுக்கு வழங்கிய சுற்றுலாத் துறை அமைச்சர் பதவியை திரும்ப பெறுவீர்களா எனக் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்

மேலும் எனக்குப் பிடித்தமான அமைச்சு அது ஒரு காலத்தில் நான் உல்லாச பயணச்சபைத் தலைவராக இருந்தேன் எனவும் அவர் குறிப்பிட்டார் ஜனாதிபதித் தேர்தலின் பின்னரும் தொண்டமான் தேவைப்படுவாரா என கேட்ட கேள்விக்கு ஆம் அவர் தேவையானவர் எனக் குறிப்பிட்டார்

## தொண்டமான் கொழும்பு திரும்பினார்

உல்லாச பயணத்துறை அமைச்சர் சௌ. தொண்டமான் நேற்று நாடு திரும்பியுள்ளார். இவர் அமைச்சர் பதவிஏற்ற நன்பின்பு இந்தியா சென்று திரும்பியுள்ளது குறிப்பிடத்தக்கது.

## சந்திரிகா தமிழில் உரை

தமிழ்பேசும் மக்களுடன் கௌரவத்துடன் கூடிய சமாதானத்தை ஏற்படுத்த சிறிலங்கா மக்கள் எமக்கு ஆணை தந்துள்ளனர் என பிரதமர் சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் ரூபவாகினியில் தேர்தல் பிரசார உரையை தமிழில் நிகழ்த்துகையில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்;

# கொழும்பு ஆஸ்பத்திரியிலிருந்த பெண்ணைத்தேடி வலைவீச்சு

## தற்கொலை படையாளியுடன் தொடர்புடையவராம்

கிராண்பாஸ் குண்டு வெடிப்பு தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டுவரும் சிறிலங்கா புலனாய்வு பிரிவினர் கொழும்பு ஆஸ்பத்திரியிலிருந்து திடீரெனக் காணாமல் போயுள்ள ஒரு பெண்ணைத் தேடி வருகின்றனர்.

குண்டு வெடிப்பில் சம்பந்தப்பட்டதாகக் கருதப்படும் தற்கொலைப் படையாளி குண்டு வெடிப்பிற்கு சிலமணி நேரம் முன்பாக இப் பெண்ணை மருத்துவ மனையில் சென்று சந்தித்ததாக பொலிசார் கண்டுபிடித்துள்ளனர்.

இப் பெண்ணால் ஆஸ்பத்திரி வட்டாரங்களுக்குக் கொடுக்கப்பட்டிருந்த விலாசத்தில் பொலிசார் தேடுதல் மேற்கொண்ட போதிலும் எதுவித தகவல்களையும் அவர்களால் பெறமுடியவில்லை இப் பெண்ணும் தற்கொலைப் படையாளியின் குழுவில் ஒருவர் என பொலிசார் நம்புகின்றனர்;

# கடற்தொழிலிற்குச் சென்ற சிறுவனைக் காணவில்லை

(குருநகர்)

சிறிலங்கா கடற்படையின் விசைப்படகு வருவதைக் கண்டவர்கள் தம்முடன் கூடத் தொழிலுக்குச் சென்றிருந்த சிறுவனை விட்டுத் திரும்பிய சம்பவம் கடந்த புதன்கிழமை இரவு நடைபெற்றது.

குருநகர் தண்ணீர்த்தாங்கி வீதியைச் சேர்ந்த டிசல் பெரோ செபஸ்தியன் (கியூபன் வயது 15) என்னும சிறுவனே அவ்விதம் விடப்பட்டவராவார்-

சம்பவம் பற்றித் தெரிய வருவதாவது:

கடல் தொழிலில் ஈடுபட்டிருந்த அச் சிறுவன் வலையின் ஒரு முனையில் காவலுக்கு விடப்பட்டிருந்ததாகவும்-

வலையின் மறு முனையில் நின்றவர்கள் திரும்பவும் சிறுவன் நின்றிருந்த இடத்திற்கு வந்து அவனை ஏற்றிச்செல்ல முன்பாக கடற்படை விசைப்படகின் இரைச்சலைக்கேட்டு மற்றவர்கள் கரை திரும்பியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மண்கும்பான் கடல் பிரதேசத்தில் விடப்பட்ட மேற்படி சிறுவனை மறுநாள் வியாழக்கிழமை இரவு தேடிச் சென்றவர் காணாமல் திரும்பி வந்தாரென்றும் தெரிவிக்கப்படுகிறது,

சிறுவனின் தாயார் சர்வதேச செஞ்சிலுவைச் சங்க யாழ் வதிவிட அலுவலகத்தில் சிறுவனை மீட்டுத்தரும்படி விண்ணப்பித்து இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது- (21)


யாழ் ஸ்ரீதர் அகலத்திரையில்

முல்லை மாவட்ட கலை பண்பாட்டுக் கழகமும் நிதர்சனமும் இணைந்து வழங்கும்

பொ. தாசனின்

“இன்னும் ஒரு நாடு”

தினசரி பிற்பகல் 2-30, 4-00, 6-00

சனி, ஞாயிறு காலை 10-30, 4-30, 6-30

சனி, ஞாயிறு 2.30 மட்டும்

ஓகஸ்ட் ‘94 ஒளிவீச்சு காண்பிக்கப்படும்.

(சி-10636)


# மனைவியுடன் 8 பேரை சுட்டுக்கொன்ற சிப்பாய்

## இறுதியில் தானும் தற்கொலை

(கொழும்பு)

தனது மனைவியின் நடத்தையில் சந்தேகம் கொண்ட இராணுவத்தைச் சேர்ந்த ஒருவர் மனைவி அவரது சகோதரி, தாய், தந்தை உட்பட எட்டுப்பேரை சுட்டுக்கொன்றுள்ளார்- இவர்களில் ஒருவர் கர்ப்பிணிப்பெண்-

குருநாகல் மாவட்டத்தில் மாவத்தகம பொலிஸ் பிரிவில் நடைபெற்ற இச் சம்பவத்தில் துப்பாக்கிப் பிரயோகத்தின் இறுதியில் தன்னைத் தானே சுட்டு தற்கொலை செய்து கொண்டார்-

## 1994 மாவீரர் நாள்

வாகிகள், ச. ச. நிலையங்களின் சமாச நிர்வாக சபை உறுப்பினர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு யாழ். மாவட்ட அரசியல் துறையினர் கேட்டுள்ளனர்;

தீவகக்கோட்ட, வலிகாமக் கோட்டத்திற்கான கூட்டம் நாளை ஞாயிறு காலை 10 மணிக்கு யாழ் மாவட்ட அரசியல் துறைச் செயலகத்திலும்,

வடமராட்சிக் கோட்டத்திற்கான கூட்டம் நாளை ஞாயிறு பிற்பகல் 4 மணிக்கு நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்திலும்,

தென்மராட்சிக் கோட்டத்திற்கான கூட்டம் நாளை ஞாயிறு பிற்பகல் 4. மணிக்கு மீசாலைவீரசிங்கம் மகா வித்தியாலயத்திலும் நடைபெறும்.

## காமினியின்

களை அனுப்புவதற்கு திட்டமிட்டிருந்தது தெரிய வந்துள்ளது.

காமினி திசாநாயக்காவின் அழகிய படத்துடன் பச்சை வர்ண பின்னணியில் மஞ்சள் நிற எழுத்து பொறித்த வாழ்த்து மடல்கள் அச்சிடப்பட்டிருந்தன.

அவர் கொலை செய்யப்பட்ட போதிலும் மும்மொழிகளிலும் அவரால் அச்சிடப்பட்ட வாழ்த்து மடல்களை அவரது செயலகம் தலைவர்களுக்கு அனுப்ப நடவடிக்கை எடுத்துள்ளது

## ஐ. தே. க

கேவலமாக விமர்சிக்கின்றார்கள் இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வே சரியானது எனக் கூறும் பூமிபுத்ர இயக்கத்தினருக்கும், நான் ஒரு கேள்வி விடுக்கின்றேன். வெளிநாடுகளிலும், சொகுசு வாழ்க்கையிலும் வாழும் உங்களது பிள்ளைகளில் எத்தனை பேர் யுத்தத்தில் இறங்கியுள்ளீர்கள்? அல்லது நீங்களாவது யுத்த தளங்களுக்கு சென்றிருக்கிறீர்களா? ஆயிரக்கணக்கான அப்பாவி கிராம மக்களின் மகன்மாரே இந்த யுத்தத்தில் இறந்திருக்கிறார்கள் எனவும் அவர் தெரிவித்தார்,

## சந்திரிகா

பார்க்கப்படுவதாகவும் குறிப்பிட்டார்.

சமாதானப் பேச்சுகளுக்கு இராணுவம் முட்டுக்கட்டை போடுகிறது என்ற நிலை ஏற்பட்டால் அது சர்வதேச அரங்கில் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவானதாக இருக்கும் எனவும் இராணுவம் தற்போது அஞ்சுவதாகவும் கூறப்படுகிறது

## இளைஞர்

இவ் கடந்த வெள்ளிக்கிழமை 28-ம் திகதி கள்ளிக்காடு ஐயனார் கோயிலடிக்குச் சென்றிருந்த போது அப்பகுதியில் மறைந்திருந்த இராணுவம் இவரை பிடித்துச் சென்றது. இவர் ஒரு மனநோயாளி போல்காணப்பட்டார்.(யோ)

## கோமாரி

பெறவில்லை இன்று கப்பலில் இருந்து மா இறக்கப்படும்

இக்கப்பல் மூலம் யாழ் மாவட்ட ஒய்வூதியர்களது நவம்பர்மாத வவுச்சர்கள் எடுத்துவரப்பட்டு செயலகம் வந்து சேர்ந்தது (யோ)

## ஹெட்சன்

நேற்று முன்தினம் இரவு எட்டு மணிக்கு ஒலிபரப்புவதற்காக இவ்வுரை ஒலிப்பதிவு செய்யப்பட்டது இந்த உரை ஜனாதிபதி தேர்தலில் வேட்பாளர்களின் ஒலிபரப்புக்கள் தொடர்பாக தேர்தல் ஆணையாளரின் அறிவுறுத்தல்களை மீறியுள்ளதால் இவ்வாறு இடை நிறுத்தப் பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது


பண்டத்தரிப்பு

பனை தென்னை வள அபிவிருத்திக் கூ. சங்கம் (வ.து)

கிளைக் குழுத் தேர்தல் 1994-11-06

கிளைக் குழு தேர்தல் நடைபெறும் கிளைகளும் இடமும்

| கிளை இல | கிளையின் பெயர் | தேர்தல் நடைபெறும் இடம் |
|---|---|---|
| 67 | பண்டத்தரிப்பு | சென்மேரிஸ் சனசமூக நிலையம் பண்டத்தரிப்பு |
| 73, 73A | விளான் | யசிந்தா பாடசாலை பண்டத்தரிப்பு |
| 74 | இளவாலை | மானிப்பாய் ப. தெ. வள அ. கூ. சங்க பழைய காரியாலய மண்டபம் |
| 74A | சிந்திப்பந்தல் | ” ” ” ” |
| 75 | மாதகல் | தற்போதைய சங்க அலுவலகம் மானிப்பாய் |
| 76 | சகாயபுரம் | மானிப்பாய் ப. தெ. வள அபி கூ. சங்க பழைய காரியாலய மண்டபம் |
| 77 | சில்லாலை | தற்போதைய சங்க அலுவலகம் |

- கூட்டம் ஆரம்பமாகும் நேரம் 1994-11-06 ந் திகதி பி.ப. 12-00 மணி
- நியமனப்பத்திரம் தாக்கல் செய்யும் நேரம் 1994-11-06 ந் திகதி பி.ப 12மணி தொடக்கம்1மணி
- ஆட்சேபனை ஏற்கும் நேரம் 1994-11-06 ந் திகதி பி.ப. 1 மணி தொடக்கம் 2 மணி வரை
- தேர்தல் நடைபெறும் நேரம் 1994-11-06 ந் திகதி பி.ப. 2 மணி தொடக்கம் 4 மணி வரை

வி. கே. அருந்தவநாதன்
தேர்தல் உத்தியோகத்தர்

(சி-10651)


## மரண அறிவித்தல்

### திருமதி நற்குணநாதன் நேசம்மா

உரும்பராய் கிழக்கைச் சேர்ந்த திருமதி நற்குணநாதன் நேசம்மா 04-11-1994 அன்று சிவபதமெய்திவிட்டார். அன்னார் நற்குணநாதனின் அன்பு மனைவியும், துஷ்யந்தன் (குவைத்) அனுஷா ஆகியோரின் அன்பு தாயாரும், புவனேஸ்வரி (கனடா), காலம் சென்ற தியாகராஜா நாகேஸ்வரியின் அன்பு சகோதரியும், காலம் சென்ற சின்னத்துரை சேதுபதியின் அன்பு மகளும் ஐயாத்துரை காலம்சென்ற பவளம் ஆகியோரின் அன்பு மருமகளும், பதமநாதன் (கனடா), பத்மலிங்கம், கணேசலிங்கம் (சவூதி அரேபியா) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்,

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (5-11-94) காலை 10.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நல்லடக்கத்திற்காக உரும்பராய் இலங்காட்டு மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்;

தகவல்:
ஐயாத்துரை பத்மலிங்கம்
(மைத்துனர்)

நிசாந்தன் வீதி,
உரும்பராய் கிழக்கு.

(9984)

இப் பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1994ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 5ஆந்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது